பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 | மாசி 1 | ரபி-அவ் 25 | இதழ் 3
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 13-2-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1980-2-13
PERIODICALS DIVISION
LIBRARY

★ டாக்டர்கள் திடீர் 'லீவு' நடவடிக்கையின் எதிரொலி---

# யாழ். ஆஸ்பத்திரியிலும் டாக்டர்கள் திடீர் லீவு!

## வைத்திய சேவைகள் கடுமையாகப் பாதிப்பு!!

(யாழ்ப்பாணம்)

**அரசாங்க டாக்டர்களின் திடீர் 'லீவு' நடவடிக்கை, யாழ்ப்பாணத்திலும் நேற்று எதிரொலித்தது! யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று டாக்டர்கள் மேற்கொண்ட திடீர் (சுகவீன) 'லீவு' நடவடிக்கை காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் முக்கிய வைத்திய சேவைகள் சீர்குலைந்தன! அதேநேரத்தில் நாட்டின் பல மாவட்டங்களிலும் டாக்டர்கள் திடீர் 'சுகவீன லீவு' மேற்கொண்டுள்ளதால் வைத்திய சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.**

கொழும்பு, கண்டி ஆகிய இடங்களிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் வேலைசெய்த வைத்தியர்கள் நேற்று முன்தினம் திடீர் சுகவீனலீவு எடுத்துக் கொண்டதைத் தொடர்ந்தே யாழ்ப்பாணத்தில் உள்ள டாக்டர்களும் திடீர் லீவுஎடுத்ததாகக் கூறப்படுகின்றது. இதன் எதிரொலியாக யாழ். ஆஸ்பத்திரியே ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

யாழ். அரசினர் டாக்டர்கள் திடீர் லீவில் நின்றதை அறியாத நோயாளர்கள் பலர் வழமைபோல் யாழ். ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைபெறச்சென்றனர். ஆஸ்பத்திரியில் வைத்தியர்கள் இல்லை என்று அறிந்ததும் கிளிநொச்சி, பரந்தன், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை போன்ற தூரஇடங்களிலிருந்தெல்லாம் பெருந்தொகையான நோயாளர்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு சிகிச்சை பெறவந்து டாக்டர்கள் இல்லாததால் திரும்பிச்சென்றுள்ளனர்.

வார்ட்டுகளிலும்நோயாளர்களைச் சோதித்து மருந்து கொடுக்க வைத்தியர்கள் 'இல்லாததால் 'வார்ட்டு'களில் உள்ள நோயாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். (கொ)

## சுவரொட்டி வழக்கு: விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

1978ம் ஆண்டு மே மாதம் புகைப்படங்களுடன் கூடிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது தொடர்பாக திருவாளர்கள் முத்துக்குமாரசாமி, காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா ஆகியோர் சட்டமா அதிபர் மீதும், பொலிஸ்மா அதிபர் மீதும் ஒருலட்சம் ரூபா நஷ்டஈடு கோரி தொடர்ந்த வழக்கு நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நீதவான் வால்டர் டி சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அரசாங்க அழுத்தகர் சாட்சியமளிக்கையில், 78ம் ஆண்டு சி. ஐ. டி. பொலிசாரின் உத்தரவின் மீது சுவரொட்டிகள் 78ம் ஆண்டு மார்ச் 18ல் அச்சிடப்பட்டு முடிக்கப்பட்டது என்றும் அச்சிடும்போதே 18ம் திகதி 2,500 சுவரொட்டிகளை பொலிஸார் பெற்றுச் சென்றனர் என்றும் மொத்தம் 33,000 சுவரொட்டிகள் அச்சிடப்பட்டன என்றும் கூறினர்.

சட்டக்கல்லூரி அதிபர் திரு. இரத்தினசபாபதி சாட்சியமளிக்கையில் முத்துக்குமாரசாமி சட்டக்கல்லூரியில் ஒரு மாணவனாக இருந்த போதிலும் தொலைபேசி மூலமாகவோ அல்லது நேரடியாகவோ இவர்பற்றி பொலிஸார் தம்மிடம் எதுவும் விசாரிக்கவில்லை என்றும் கூறினர்.

(8-ம் பக்கம் பார்க்க)

மகா சிவராத்திரி தினம்:

## விசேட ரயில்சேவை

### மதவாச்சியில் அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு நாளையும் நாளைமறுதினமும் விசேட ரயில் சேவைகள் நடைபெறவிருக்கின்றன.

புகையிரதத் திணைக்களத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

14-ந் திகதி காலை காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் உத்தர தேவியையும் கொழும்பில் இருந்து புறப்படும் யாழ்தேவியையும் இணைத்துக்கொண்டு காலை 10-30 மணிக்கு மதவாச்சிப் புகையிரதநிலையத்தில் இருந்து காலை 11-59 க்குத் திருக்கேதீஸ்வரத்தை வந்தடையும். மாலை 2-36 க்கு மதவாச்சி புகையிரத நிலையத்தில் இருந்து புறப்படும் புகைவண்டி மாலை 6-22 க்கு திருக்கேதீஸ்வரத்தை வந்தடையும் இது தவிர வழமையாக ஓடும் புகைவண்டி காலை 1-50க்கு மதவாச்சி புகையிரதநிலையத்தில் இருந்து புறப்படும் புகைவண்டி 3-26 க்குத் திருக்கேதீஸ்வரத்தை அடையும். பி.ப. 2-06க்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## அவசர சிகிச்சைகள் கவனிக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் நேற்று அவசர சிகிச்சைகள் கவனிக்கப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்றுமாலை தெரிவித்தன.

யாழ். நகருக்கு வெளியில் கடமையாற்றும் (ஆர். எம். பி, ஏ. எம். பி) டாக்டர்கள் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு அழைக்கப்பட்டு கடமையிலிடுபட்டிருந்தனர்.

வைத்தியநிபுணர்கள் சங்கத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் நேற்றுக் கடமையாற்றினர்.

வார்ட்டிலிருந்த நோயாளிகளுக்கு வழக்கம்போல் சிகிச்சையளிக்கப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## 'வீடியோ' படக்காட்சி: பொலிசார் திடீர் வேட்டை

(யாழ்ப்பாணம்)

'பட்டாம்பூச்சி' என்றபடம் 'வீடியோ' தொலைக்காட்சியில் காட்டப்பட்டுக்கொண்டிருந்த போது, யாழ். பொலிசார் தடைசெய்து, வீடியோ யந்திரசாதனங்களையும், 'பட்டாம் பூச்சி' நாடாவையும் கைப்பற்றினார்கள்!

குருநகர் மவுண்ட். காமல் ரோட்டிலுள்ள வளவொன்றில் நேற்று முன்தினமிரவு 'வீடியோ' படம் காட்டப்படுவதாக கிடைத்த ரகசியத்தகவலைத் தொடர்ந்து பொலிசார் இந்த திடீர்வேட்டையை நடத்தினார்கள்.

இரவு 9 மணிக்கு ஆரம்பமான படத்தை 8-40 மணி வரை, சுமார் 300 பேர் வரை பார்த்து ரசித்துக் கொண்டி

(8-ம் பக்கம் பார்க்க)

## பாதியில் நின்ற 'படம்'
### ரூ. 100 அபராதம் அல்லது சிறை!

(யாழ்ப்பாணம்)

'ஆடு புலி ஆட்டம்' என்ற படம் அரைவாசியுடன் நிறுத்தப்பட்டு, 'வீடியோ' யந்திரங்களை கோப்பாய் பொலிசார் கைப்பற்றினர்கள்.

யாழ். பதில் நீதவான் கே. எஸ், மகேசன் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில், கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில், 'ஆடு புலி ஆட்டம்' வீடியோ படக்காட்சியை சட்டவிரோதமாகக் காட்டியதாக மாசிலாமணி தில்லைநாயகம் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதவான் 100 ரூபா அபராதம் அல்லது ஒருமாத சிறைத் தண்டனை

(8-ம் பக்கம் பார்க்க)

## தொலைபேசி தூங்குகிறது

(நமது நிருபர்)

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையிலான தொலைபேசித்தொடர்புச் சேவை முன்னர்பகலில் மட்டும் தான் 'அழுது' கொண்டிருந்த போதிலும் கடந்த சில தினங்களாகஇருபத்துநான்கு மணிநேரமும் 'தூங்கிக்' கொண்டிருக்கிறது.

பகலில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு தொலைபேசி அழைப்பு கோரப்பட்டால், எட்டுமணி நேரம் 'டிலே' பதில் கிடைக்கும்!

மாலை நேரத்தில் சுலபமாக தொலைபேசித் தொடர்பு கிடைக்கலாம் என்று இப்பொழுது மாலை நான்கு மணிக்கு கொழும்புக்கு தொலைபேசி அழைப்பு கோரப்பட்டாலும் காலையில் கிடைத்த அதே ஏழு மணி நேர தாமதப் பதிலே சொல்லப்படுகிறது!

கொழும்பு-யாழ்ப்பாணம் கடுகதி ரயில் சேவைகூட 9 மணி நேரம் என்று இருக்கும்பொழுது, தொலைபேசித் தொடர்பும் அதேநேரம் என்றால், தொலைபேசிச் சேவை ஒரு அவசர அவசியமா?என்றுயாழ் பிரபல வர்த்தகர்கள் கேட்கிறார்கள். இது நியாயம்தானே?

வ

சிவமயம்

நகுலேஸ்வரம்
(கீரிமலை)

அருள்மிகு

நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர ஆலய

தேர்உற்சவமும் மகாசிவராத்திரி உற்சவமும்

14-2-80 வியாழக்கிழமை உதயம் 4மணி ஸ்நபனபிஷேகம்.
உதயம் 5 மணி பூசை ஸ்தம்பபூசை
காலை 6 மணி வசந்த மண்டபபூசை
காலை 8 மணி திருத்தேர் திருவீதி உலா வந்து அடியார்களுக்கு காட்சி கொடுத்தல்.

மாலை 5 மணி சர்வாலங்காரமாகி விசேட பூசைகள் நடைபெற்று சர்வமங்கள வாத்தியங்களுடன் யதாஸ்தானத்திற்கு எழுந்தருளல். இரவு நான்கு சாம அபிஷேக பூசைகளும் ஸ்தம்பபூசையும், லிங்கோற்பவ நேரமாகிய 12 மணிக்கு ஜோதிலிங்கத்திற்கு மகா நியாச பஞ்சமுகார்ச்சனையும், மகாசிவராத்திரி உற்சவமும், 15-2-80 உதயம் சமுத்திரதீர்த்தம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. 14-2-80 இரவு 7மணி தொடக்கம் நகுலேஸ்வர ஆதீன வித்துவான்களின் பண்ணிசையும், இன்னிசையும் கதாப்பிரசங்கமும், நாதஸ்வர தவில்கச்சேரிகளும் நடைபெறும். மகாசிவராத்திரி உற்சவத்தையிட்டு விசேட பஸ்சேவை நடைபெறும். 17-2-80 ஞாயிறு பூங்காவன உற்சவமும் நடைபெறும்.

கு. நகுலேஸ்வரக்குருக்கள்,
நகுலேஸ்வர ஆதீனம்.

நகுலேஸ்வரம்,
11-2-80.

4946

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

14-2-80 வியாழக்கிழமை மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு திருக்கேதீஸ்வரம் தேவஸ்தான வீதியில் யாழ். மில்க்வைற் ஸ்தாபனத்தாரின் மலிவு விற்பனை நடைபெறும். அத்துடன் சிவன் பார்பதி படமும், நோரூ, ஒருமுகக்கலண்டர் ஆகியன இலவசமாக வழங்கப்படும். மில்க்வைற் மேலுறைகளை வைத்திருப்பவர்கள் அங்கு கொடுத்து சிறந்த பரிசுப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம். யாழ்ப்பாணம். 4889

## தகரவேலைக்கான (TINKER) கேள்வி விண்ணப்பம்

எமது சங்கத்தின் இருலொறி ஒன்றுக்கு தகரவேலை (ரிங்கர்) செய்வதற்கான கேள்விவிண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் 25-2-80 நண்பகல் 12-00 மணிக்கு முன் சங்கத்தில் ரூபா 05-00 பத்திரப்பணமும், ரூபா 50-00 வைப்புப் பணமும் செலுத்தி பெறப்படும் விண்ணப்பப்படிவத்தில் "பொது முகாமையாளர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி" என்னும் விலாசத்துக்கு விண்ணப்ப உறையின் இடதுமூலையில் வேலை விபரம் குறித்து 27-2-80-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் விண்ணப்பிக்கலாம்.

லொறியைப் பார்வையிடுவதற்கும், ஏனைய விபரங்களுக்கும் சங்கத் தலைமையலுவலகத்துடன் தொடர் கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
கரைச்சி தெங்கு
ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.

4947


## கைதடி தர்ம இல்ல கொடித்தினம்

(யாழ்ப்பாணம்)

கைதடி சைவச் சிறுவர் தர்ம இல்ல கொடித்தினம் மார்ச் மாதம் 10ம் திகதி நடைபெறும்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தமது இல்லத்தில் வைத்து முதல் கொடியைப் பெற்றுக்கொள்ளுவார்.

பிரதமர் ஆர். பிரேமதாச, பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை, எதிர்க்கட்சித்தலைவர் அ. அமிர்தலிங்கம் ஆகியோர் கொடிதினத்தை முன்னிட்டு ஆசிச்செய்திகளை வழங்கியுள்ளனர். (கொ)

## கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வர ஆலய மகோற்சவம் சிவராத்திரி தினத்தன்று நான்கு ஜாம அபிஷேகத்துடனும், பூஜையுடனும் வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்று காலை 8 மணிக்கு பஞ்சமூர்த்திகள் இரதத்திற்கு எழுந்தருளி மங்கல வாத்தியங்களுடன் வீதியுலா வரல். பிற்பகல் 4 மணிக்கு விசேட அலங்காரமும் ஆராதனையும் நடைபெறும். சுவாமிதிருநடனத்துடன் யதாஸ்தானத்திற்கு எழுந்தருளி, இரவு இரதாரோகண பிராயச்சித்தாபிஷேகமும் ஜோதிலிங்கத்திற்கு மஹாநியாச அர்ச்சனையும் நடைபெறவுள்ளது.


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

### முஸ்லிம் வட்டாரத்திலுள்ள ஆட்டிறைச்சிக் கடைகளுக்கான குத்தகை 1980 / 1981

மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட, முஸ்லிம் வட்டாரத்திலுள்ள பின்வரும் ஆட்டிறைச்சிக் கடைகளை 01-03-1980 முதல் 31-12-1981 வரையிலான காலத்திற்குக் குத்தகையில் கொடுப்பதற்கானகேள்விகள் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 28-02-1980-ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் அதற்கென விதிக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்துவதன் பேரில் மாநகராட்சிமன்ற அலுவலகத்திலிருந்து 27-2-1980-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம்.

### குத்தகை விபரம்

1. ஆட்டிறைச்சிக்கடை. 65, ஜின்னா ரோட், யாழ்ப்பாணம்.
2. ஆட்டிறைச்சிக்கடை, 147, முஸ்லிம் சல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி
மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
12-02-1980. 4950


## "நபி பெருமானர் பிரசாரத்தின் மூலம் தவறு செய்தோரை நல்வழிப்படுத்தினர்"

### மீலாத் விழாவில் உரை

(யாழ்ப்பாணம்)

"அராபிய தேசம் அறியாமையில் மூழ்கிக்கிடந்த காலத்தில் தோன்றியவர் முகம்மது நபி. அந்நாட்டின் அறியாமையைப் போக்கி, மக்களை நல்வழிப்படுத்தத் தமது வாழ்நாளையே அர்ப்பணித்த நபிகள், அராபிய மக்களால் பல இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டார். சகல வல்லமையும் பொருந்திய நபிகள், தம்மைத் துன்பத்துக்குள்ளாக்கியவர்களைக்கூடத் துன்பப்படுத்த விரும்பவில்லை. அதற்குப் பதிலாகத் தம்மைத் துன்புறுத்தியவர்களை நேசித்து அவர்களை நல்வழிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார்."

யாழ். ஐந்து சந்தியில் நடைபெற்ற மீலாத் விழாவில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜெகநாதன் மேற்கண்டவாறு கூறினர்.

அகில இலங்கை முஸ்லிம் முன்னேற்ற இயக்கமும், தேசிய இளைஞர் சேவை மன்றமும் இணைந்து நடாத்திய மீலாத் விழாவிற்கு அ. இ. மு. மு. இயக்கத் தலைவர் ஜனாப் எஸ். ஏ. சி. எஸ். கமீட் தலைமைதாங்கினர்.

தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ். மாவட்ட அதிகாரி திரு. ஏ. நீலகண்டன் பேசுகையில் கூறியதாவது:

"முகமது நபி, புத்தர், இயேசு, காந்தி போன்றோர் ஆசியாவில் தோன்றி, மக்கள் மத்தியிலுள்ள அறியாமையைப் போக்கி மக்களை நல்வழிப்படுத்தினர்கள்.

"நான் எதை எழுதினாலும் பேசினாலும் அது முகமது நபி கூறியதாகவே இருக்கிறது எனப் பெர்னட்சா எழுதியுள்ளார். முகமது நபியைப் பற்றிச் சிந்திக்கும்போது கண்ணீர்தான் வருகிறது எனக் காந்திமகான் கூறியுள்ளார், அத்தகைய மகான்களின் வழிகாட்டலைப் பின்பற்றி எமது இளைஞர்கள் வழிநடக்கத் தவறியதால், 71ம் ஆண்டு எத்தனையோ இளைஞர்கள் தமது இன்னுயிர்களை நீக்க வேண்டியேற்பட்டது.

"இளைஞர்களை நல்வழிப்படுத்தவும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவும் எமது அரசு பல திட்டங்களை மேற்கொண்டுள்ளது. அதன் ஓரங்கமாகவே தேசிய இளைஞர் சேவை மன்றம் இயங்கி வருகிறது. இம்மன்றம் இளைஞர்களை நல்வழிப்படுத்துவதோடு நின்றுவிடாது, அவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கவும், இளைஞர்கள் நடாத்துகின்ற மத வைபவங்களிலும் பங்குபற்றி இளைஞர்களை மேலும் ஊக்குவிக்கின்றது."

யாழ். பல்கலைக்கழக அரபு மொழி விரிவுரையாளர் ஜனாப் எம். ஐ. அப்துல் றசாக் பேசுகையில் கூறியதாவது:

"உலகத்திலே தோன்றிய தலைவர்கள், சிந்தனையாளர்களில் எமது நபிகளே எல்லாத்துறைகளையும் தன்னகத்தே கொண்ட ஓர் உயர்ந்தவராகத் திகழ்கிறார்.

"இஸ்லாமிய சகோதரத்துவத்தைச் சொல்லளவில் இல்லாமல் செயலளவில் நடைமுறைப்படுத்திக் காட்டியவர் பெருமானர். தானக, தனக்காக வாழாமல் உலகத்திற்காக வாழ்ந்து காட்டியவர் பெருமானர்.

"உலகத்தில் தோன்றிய பெரியார்களில்முதலிடத்தைப் பெறுகிறார் பெருமானர். உலக மொழிகளில் எல்லாம் பெருமானரைப் பற்றி எழுதியுள்ளனரென்றல் அவரின் சாதனையைப் பற்றி நாம் என்னவென்று கூறுவது?

"20 பேரரசுகளை ஓர் ஆண் மீகப் பேரரசின்கீழ்க் கொண்டு வந்தவர் பெருமானர். காட்டு மிராண்டிகளும், மிலேச்சர்களும், எதேச்சாதிகாரிகளும் அரேபியாவில் வாழ்ந்த காலத்தில்தான் பெருமானர் தோன்றினர். ஒரு குறுகிய காலத்தில் தமது முயற்சியினல் எல்லோரையும் நல்ல நிலைக்கு ஆளாக்கினர்.

"உலகம் அறியாமையில் இருந்த காலம் அது. அறியாமையும், அநீதியும் நிறைந்த காலத்தில் தோன்றிய பெருமானர், அராபிய மக்களின் நிலையை நன்கறிந்து, அதை எப்படிப் போக்குவதென உணர்ந்து செயற்பட்டார். அதனல்தான் இன்றும் மக்களால் போற்றப்படுகிறார்.

"அராபிய சமுதாயத்தில் எல்லாமிருந்தும் இறை பக்தி இல்லாமல் இருப்பதை உணர்ந்த பெருமானர், மக்கள் மத்தியில் சென்று இறைவனைப் பற்றிப் பிரசாரஞ்செய்து அல்லாவை நம்பவைத்ததோடு, ஆண்டவனைத் தொழவும் செய்து, இருள் சூழ்ந்த உள்ளங்களில் ஒளியை உண்டாக்கினர்.

"உலகத்தில் தோன்றிய மனிதர்கள் தவறுசெய்யத்தான் செய்வார்கள். தவறு செய்தவர்கள் வெறுக்கப்படுபவர்கள் அல்ல. அவர்கள் இரக்கப்படவேண்டியவர்கள் எனக் கூறினர் பெருமானர். மக்களுடைய மனம் பக்குவப்படக்கூடிய முறையில் பிரசாரத்தை மேற்கொண்டார். பிரசாரத்தின் மூலம் தவறு செய்தவர்களை நல்வழிப்படுத்தினர்.

"மது அருந்தியவர்களைப் பார்த்து, மது அருந்திவிட்டு ஆலயத்திற்குச் செல்லாதீர்கள் எனக் கூறினர். மது அருந்தாதே என்று கூறி மது அருந்துவோரின் பகைமையைச் சம்பாதித்துக்கொள்ள விரும்பாததால்தான் மது அருந்திவிட்டு ஆலயத்திற்குச் செல்லாதீர்களெனக்கூறினர். இவ்வாறு மக்களின் நோயை அறிந்து அதற்கேற்றவாறு மருந்துகளை வழங்கினர் பெருமானர். அவ்வாறு அவர் கூருது மது அருந்தாதே என்று கூறியிருந்தால் மக்களால் வெறுக்கப்பட்டிருப்பார். சிறந்த சாணக்கியவாதியாகத் திகழ்ந்ததால்தான் சிறந்த சமுதாயத்தை உருவாக்கக்கூடியதாக இருந்தது.

அகில இலங்கை முஸ்லிம் முன்னேற்ற இயக்கம் நடாத்திய பேச்சுப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவ மாணவிகளுக்கு பிரதம விருந்தினர் ஜனப் எம். ஏ. மஃபூப் பரிசில்கள் வழங்கினர்.

(கொ)

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத் திருநெல்வேலி இடவளவில் அமைந்திருக்கும் பரமேஸ்வரன் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா நிகழ்ச்சிகளாக மேளக்கச்சேரி, பக்திப் பாடல் இசை, சங்கீதக் கச்சேரி, சொற்பொழிவுகள் இடம் பெறவுள்ளன.

## நயினை நாகம்மாள் கோவிலில்

சிவராத்திரி தினத்தையொட்டி நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் வேதபாராயணம், திருமுறை ஓதல், புராணபடனம், சொற்பொழிவு, பக்திப் பாடல், நாதஸ்வரஇசை முதலிய நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

பக்திப்பாடல்களை வித்துவான். க.காமாட்சிசுந்தரம், சங்கீத பூஷணம் திருமதி நீ. செல்வராசா, செல்வி ஜெயலட்சுமி இராமலிங்கம் திருமதி பராசக்தி சிவநாதன், நா. கணபதிப்பிள்ளை, திரு.க.வடிவேலு ஆகியோரும் கணேச நயினை மகா வித்தியாலய மாணவர்களும் பாடுவார்கள்.

காரைநகர் மெய்கண்டார் ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் "சக்தியின் மகிமை" என்னும் பொருளில் அருளுரை வழங்குவார்.

புராணபடன நிகழ்ச்சியில் திரு. வே. பொன்னம்பலம். திரு வே. பாலசுப்பிரமணியம், திரு. கா.ஆறுமுகம் ஆகியோர் பங்கு கொள்கின்றனர்.

நகாபூஷணிஅம்பாள் தேவஸ்தான சிவாச்சாரியார்கள் வேதபாராயணம் நிகழ்த்துவார்கள்.

நாதஸ்வரக் கச்சேரியும் இடம் பெறும். (நா)


விவசாயிகளே! இதோ வந்துவிட்டது!!



நீங்கள் எதிர்பார்த்த அற்புதமான, சிக்கனமான, சக்திவாய்ந்த சர்வபூச்சிநாசினி

# பரத்தியன் 63

எல்லாப் பயிர்களையும் பாதிக்கும் எல்லாப் பூச்சி, புழுக்களையும் உடனே கட்டுப்படுத்துவதுடன் நீடியகாலம் தங்கும் தன்மையும் தரும்.

கிடைக்குமிடம்:
அக்ரேஸ் லிமிட்டெட்,
56, கந்தப்பசேகரம் வீதி,
யாழ்ப்பாணம்.

ஏகவிநியோகஸ்தர்கள்:
ஜெகெம்
39, பிறிஸ்டல் பில்டிங், 51, யோக் வீதி,
கொழும்பு-1. தொலைபேசி: 24353


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவவிரதங்களில் மேம்பட்டது சிவராத்திரி விரதமேயாம்

## மணிவாக்கு

நிலைமை தாங்கமுடியாத அளவுக்கு கஷ்டமாகும்போதுதான் கடவுள் நம்பிக்கையின் உறுதி உறுதியின்மையைக் காணலாம்.

-மகாத்மா காந்தி

## மக்கள் கருத்து

### சமூக, பொருளாதார ஆய்வு

சாவகச்சேரித் தொகுதியின் அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தொகுதியினை ஆய்வு செய்து அறிக்கை ஒன்றைச சமர்ப்பிக்கும் பொறுப்பு யாழ். பல்கலைக்கழகப் புவியியல்பகுதி தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. இதற்கு முழுமையானதொரு சமூக, பொருளாதார ஆய்வை மேற்கொள்ளுமுகமாக தொகுதியின் ஒவ்வொரு குடும்பத்தாரிடமிருந்து வினக் கொத்துக்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. உண்மையிலேயே தற்கால வருட வருமானம், உணவு முத்திரை, வருமான வரி சம்பந்தமாக மக்கள் பீதியுற்றிருக்கும் இக்காலத்தில் உண்மையான தரவுகளை அவர்கள்மூலம் அறிவது கடினமாகும். ஆனல் இத்தகைய பணியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மிகவும் ஊக்கத்துடன் செயல்பட முன்வந்தது மிகவும் வரவேற்கத்தக்கதொரு விடயமாகும். அவர்கள் தமது விடுமுறைக்காலத்தையும் பாராது தமது அறிவினை ஆய்வுமூலம் கூர்மையாக்குவதுடன் தாமும் சில அனுபவங்களை நேரில் கண்டறிந்திருக்கக்கூடும். குடும்பத்தவர்கள் சில தரவுகளைத்தர மறுத்தபோதும் அவர்கள் சார்பாக கதைத்தும், குடும்ப நிலைகளை அவதானித்தும் உண்மையான தகவல்கள் பலவற்றை இவர்கள் பெற்றுர்கள். இதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்களது ஆய்வு சம்பந்தமான ஆர்வமும், பொறுப்பான கடமையுமே காரணங்களாகும். பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டதனுல்தான் பெருமளவு, பூரணமான தரவுகளைப் பெற முடிந்தது. இத்துடன் சாவகச்சேரித் தொகுதி மக்கள் பலரின் ஒத்துழைப்பும் இவ் ஆய்வை மேற்கொள்ளப் பெரிதும் துணைபுரிந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக பல பிரச்னைகள் கொண்ட பல்கலைக்கழக மாணவர்களும், யாழ். பல்கலைக்கழக புவியியல் தலைவரும், பொருளியல் தலைவரும் மாணவர்கட்கு இத்தகைய ஒரு வாய்ப்பினையும், சந்தர்ப்பத்தையும் கொடுத்து, இவ் வாய்வுத்துறையில் ஈடுபட வைத்ததும் பாராட்டத்தக்க செயலாகும். முழுமையானதொரு ஆய்வை மேற்கொள்வதில் சாவகச்சேரித் தொகுதி மக்கள் மேலும் ஒத்துழைப்பு வழங்குவதுடன், இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள யாழ். பல்கலைக்கழகப் புவியியல், பொருளியல்துறைத் தலைவர்களையும், விரிவுரையாளர்களையும், மாணவர்களையும் வரவேற்று அவர்களின் தொகுதி நன்மை கருதி மேலும் பூரண ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்குவது கடமையாகும்.

**க. சிவஞானேஸ்வரி**
-சாவகச்சேரி

(நாளை சிவராத்திரியை முன்னிட்டு இக்கட்டுரை வெளியாகின்றது.)

நாளை வியாழக்கிழமையன்று சிவராத்திரிதினமாகும். சிவனுக்கிணையாகத் தெய்வமுமில்லை; சிவராத்திரிக்கிணையான விரதமுமில்லை. சிவபிரானை வழிபடுதற்குரிய சிறந்த இரவு சிவனிரவாகும். திருவருளாகிய சிவசக்தியின் வேண்டுகோளுக்கியைந்து இறைவன் அருள்பாலித்த இரவு. பிரம விட்டுணுக்களாகிய ஆன்மாக்கள் ஆணவ முனைப்பினுல் தம்மை மறந்து நாமே பெரியர் என்று தருக்கித்துப் போர் முயன்றபோது அவரையும் பிறரையும் ஆட்கொள்ளத் திருவுளங்கொண்டு சிவபிரான் ஒளி வடிவமாகக் காட்சியளித்த இரவு என்றிவற்றுள் ஒன்றினைக் கொள்ளினும் அன்றி இரண்டையும் ஒருங்கே கொள்ளினும் சிவனிரவுக்குப் பொருளாகக் கொள்ளலாம். சிவபரம் பொருளைத் தியானிக்கும்படி செய்து இவ் விரவு சிறந்த பேற்றைஅளிக்க வல்லதாம்.

ஒரு கற்பகாலத்தில் பிரமண் ஒடுங்கினுன். அவனுற் படைக்கப்பெற்ற உலகமும் ஓடுங்கிற்று. அவ்விரவில், திருவருட் செல்வியாகிய உமையம்மை, பொன்துணர்கடுக்கை வேணிப் புனிதராகிய சிவபிரானை நான்கு யாமத்தும் அருச்சித்தார். அதன்பின், உலகாந்தம் நிலவியது. உமையம்மையார் இடப்பாகத்தமர்ந்து தாம் இறைவனை வழிபட்ட இரவில், தம்மைப் போலவே விழித்திருந்து வழிபாடியற்றும் ஆன்மாக்களுக்கு வீடுபேற்றை நல்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். இறைவனும் அதற்கிசைந்தருளினுர். இதனுலேயே இவ்விரவு சிவனிரவு என்று அழைக்கப்பட்டது என்பர் ஒரு சாரார்.

பின்னும் ஒரு கற்பவிறுதியில் வழக்கம் போலப் பிரமனும் மாண்டான். உலகமும் அழிந்தது. உயிர்களும் ஒடுங்கின. ஈறிலா முதல்வனுகிய சிவன் யாவருமுய்ய யோகமுற்றிருந்தார். திருமால் பிரளயகால வெள்ளத்தில் அமிழ்ந்திக்கிடந்த உலகினை மீட்டுக் கொணர்ந்து முன்போல் நிறுவினுர். பண்டுபோல் உலகினைப் படைத்தற்குத் தமது உந்தியங்கமலத்தினின்று பிரமனைப் படைத்தார். பிரமன் அனைத்தையும் படைத்தான். படைத்தவற்றைப் பார்த்தான் 'இவையனைத்தையும் யாந்தாமே படைத்தனம்' எனக் கருவங்கொண்டான். இவ்வாறு கருவங்கொண்ட பிரமன் திருப்பாற் கடலிற் பள்ளிகொண்ட மாயோனை அணுகித் தனது, கையினுல் அவன் மார்பில் தாக்கி, ''திருமாலே துயிலினின்றும் எழுந்திரும்'' என்றுன். அத்தாக்குதலை ஏற்றுக்கொண்டு எழுந்த திருமாலை நோக்கி, 'நீ யாரப்பா' என்றுன். திருமால் பிரமனை நோக்கி, 'நான்கு தலைகளையுடைய மைந்தனே! யான் உனது தந்தையல்லவா? இதை அறியாயா?' என்றுர். பிரமன் நகைத்து, உம்மை நித்திரையினின்று விழிக்கச் செய்யினும் இன்னும் தெளிவு வரவில்லைப் போலும். தந்தையர் மைந்தர்க்குச் சொல்வதுபோல என்னேடு உரையாடுகின்றீர், நான் பிரமமேகாண். உந்தியிலிருந்து வரும் உண்மையை உணராமல் மைந்தன் என்று என்னை நீர் மனத்தில் நினைத்தீர். விறகிலிருந்து தீக்கடவுள் தோன்றுகின்றமையால் எரிக் கடவுளுக்கு விறகா தந்தை? இதுவெல்லாம் சமக்குரைகள். நீர் நரசிங்கா[illegible] ஒரு தூணினின்றும் [illegible]றினீர். அதனுல் அந்தத் தூண்தான் உம்மிலும் உயர்ந்ததோ? பிருகுமுனிவர் சாபத்தால் பத்துப்பிறவிகளை எடுத்தீர். அந்தப் பிறவிகளெல்லாம் உம்மைப் படைத்துப் படைத்து என் கையும் சிவந்துவிட்டது காண்'' என்றுன்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட திருமால் ''நன்று நன்று'' என்று சிரித்து வெகுளியாற் கைகளைப் புடைத்துக்கொண்டு உரைசெய்வாராயினர். ''நச்சரவம் பூண்ட நம்பனுகிய சிவபிரான் உன் சென்னியில் உச்சியத் தலையினை உகிராற் களைந்துவிட்டார். அதுபோது அச்சமுற்று வீழ்ந்தாய். இன்னமும் அதைப் படைத்து வைக்கும் ஆற்றலுனக்கில்லை. இந்தச் சீரில் என்னை நீ தருவது நன்று. நேயமாய் உன்னைப் பெற்ற தாயும் யான், தந்தையும் யான். கடவுள் யான், குரு யான், மாயையினுல் இன்று மதிமயங்குகிருய். பொன்னையின்றிப் பூணுண்டோ? ஆட்சி செய்யும் அரசனின்றி மாநிலம் உண்டோ? மாநிலம் இல்லாமல் வளமுண்டோ? என்னையின்றி எச்சராசரமுமுண்டோ? விண்ணகத் தலைவன் நான்; வேதமும் பொருளும் நான்'' என்று பற்பல உரைத்தார். பிரமன் உடனே உருத்துச் சென்று, ''இருவரும் போர் புரிவோம், வெற்றியுற்றவரே மேலோர்: நீ போரினை ஏற்று எழுவாயாக'' என்றுர். இருவரும் மலைத்தனர். ஒருவர்மீதொருவர் பல்வேறு பாணங்களைப் பொழிந்தனர். சிவபிரான் திருக்கடைக்கண் நோக்கினுர். பெத்த அறிவினராகிய இவர்கள் அவமே போரில் மடியப் போராடுகின்றனரே என்று இரங்கினுர். மாலாகிய நீலமலைக்கும் வேதனுகிய பொன்மலைக்கும் நடுவண் ஒரு பதுமராகமலையென ஒளிப்பிழம்பாய் நின்றுர். இதனுல் தமது போர் பங்கமுற்றமையைக் கண்ட வேதனும் மாலும் முறையே அன்னமும், பன்றியுமாகி அப்புதுமலையின் அடியையும் முடியையுந்தேடினர். கண்டிலர்; வாடினர்; கலங்கினர். இறைவன்ஆடலை உணர்ந்தனர். வணங்கினர். அகந்தையகன்றனர். ஈற்றில் இறைவன் அருள்பெற்றுய்ந்தனர். அவர்கள் விழித்திருந்து சிவனைப் பூசித்த இந்த இரவே சிவனிரவு ஆயிற்று என்பது கந்தபுராணம் கூறும் வரலாருகும். கந்தபுராணம் அடிமுடி தேடு படலத்துட் கச்சியப்ப சிவாசாரியார் விரிக்குமாற்றைக் காண்க. அங்கு பிரமன் கூற்ருக.

'அரியும் யானும்முன் தேடும்
அவ் வனற்கிரி யனல
கிரியெனும்படி நின்றதால்
அவ்வொளி கிளர்ந்த
இரவ நேசிவ ராத்திரி
யாயின(து)இறைவற்
பரவி யுய்ந்தனர் அன்ன
தோர் வைகலிற் பலரும்''

என்று அவர் கூறுவதையுங் காண்க.

இற்றைக்கு 45 ஆண்டுகளுக்கு முன்னே பவ ஆண்டு (1935) மாசித் திங்களில் எங்கள் சுவாமிகளின் தலைமையில் சிவராத்திரி மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அப்போதுதான் சிவதொண்டன் ஆரம்பித்து நடைபெற்றுவரும் முதலாவது ஆண்டாகும். இச் சிவராத்திரியின் தொடர்பாகச் சிவராத்திரியைப் பற்றி எழுதுமாறு சுவாமிகள் பணித்தார்கள். அவர்கள் கட்டளைப்படி எழுதப்பெற்ற ''சிவராத்திரி என்னும் கட்டுரை மலர் ஒன்று, இதழ் மூன்றில் வெளியாயிற்று. சுவாமிகள் தம் மாட்டு அன்புடையவர்களைச் சிவராத்திரி கொண்டாடுமாறு பணித்துத் தாமும் கலந்து [illegible] முன்னேயே பல ஆண்டுகளாகச் சுவாமிகள் சிவராத்திரியைக் கொண்டாடியும் கொண்டாடச் செய்தும் வந்தார்கள். திருநெல்வேலி ஆசிரியகலாசாலையிலும் பற்பல கோயில்களிலும், அரியாலையில் ஒரு தோட்டத்திலும் பிற இடங்களிலும் பல நூற்றுக்கணக்கான அன்பர்களோடு இச்சிவராத்திரி தினம் கொண்டாடப் பெற்று வந்தது. நான்கு சாமங்களிலும் பூசையும் திருமுறைகள் ஓதுதலும் புராணபடனமுமாக அவ்விரவு இன்பகரமாகவே - சிவ சிந்தனையோடேயே - ஆடவர் மகளிர் ஆகிய அன்பர்களாற் சாதிக்கப்பெற்று வந்தது. ஓராண்டு கொழும்புத்துறைப் பிள்ளையார் கோயிலில் மாசந்தோறும்மாச சிவராத்திரி கொண்டாடப்படலாயிற்று. அக்காலங்களில் அமைதி நிலவும். அகந்தையகலும். உள்ளம் உருகும். பேரின்பம் பெருகும். இறைவன் சந்நிதானத்திலேயே தாம் இருப்பதாக அன்பர்கள் உணர்வார்கள். தெய்வசபையாகவே அச்சபை திகழும். இவ்வாறெல்லாம் சிவராத்திரியைக் கொண்டாடும் முறையை எமக்கு எடுத்துக் காட்டித்தந்துள்ளார்கள் சுவாமிகள். அதன் பயனுக, இன்றும் சிவதொண்டன் நிலையத்தில் சிவராத்திரி கொண்டாடப்படும் முறை போல, இத்துணைப் பயபக்தியாய், அமைதியாய், ஒழுங்காய் வேறிடத்திற் கொண்டாடப்படுவதில்லையென்று கூறின் அது மிகையாகாது.

சிவ விரதங்களனைத்தினும் மேம்பட்டது சிவராத்திரி விரதமேயாம் சிவபரத்துவத்தை ஞாபகப்படுத்தும் இவ் விரதம் மற்றெவ் விரதத்தினும் மேம்பட்டது என்பதை

''மற்றொரு விரதஞ் சிவநிசிக் [கிணையா
மதிப்பது மாண்டுமூண் டுதி [த்துப்
பெற்றன தொழில்க ளியற் ]றிநின் றுழலும்
பிரமன்மால் முதலிமை யவ ]வரைப்
பற்றலர் புரமோர் நொடியினி ]லடலை
படவட வரைகுனித் தருளும்
கற்றையஞ் சடிலக் கண்ணுதற் [கிணையென்
றறிவிலா ருரைப்பது கடுக் [கும்''

என்று கூறப்படுமாற்ருற் காண்க. வாழ்க சிவராத்திரி. அதனைத் தக்கபடி பயன்படுத்தி இவ் வையகம் உய்வதாக.

**நன்றி: 'சிவதொண்டன்'**

## பாலர் வகுப்பு ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் பாலர் வகுப்பு ஆரம்ப விழா சட்டத்தரணி திரு. சி. நாகராசா தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் பேசிய திரு. நாகராசா மேற்படி பாடசாலை இதுவரை ஆற்றிய சேவைபற்றியும், ஆரம்பிக்கப்பட்ட பாலர் வகுப்பின் அவசியம்பற்றியும் கூறினுர்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இளைப்பாறியவித்தியாதிகாரி திரு. சி. நல்லையா பேசுகையில், இக்கால கல்வி நிலைபற்றியும் பாலர்களை எவ்வாறு பராமரிக்கவேண்டும் என்பது பற்றியும், இளஞ் சிறுர்க்குக் கல்வி புகட்டும் ஆசிரியர் நிலைபற்றியும் எடுத்துரைத்தார்.

திருமதி வி. மதுரலிங்கம் பேசுகையில், பாலர் கல்வி ஆசிரியர் எவ்வாறு ஒழுகுதல் வேண்டும் என்பதுபற்றியும், ஆசிரியர் இசை, நடனம், விளையாட்டு இவற்றை அறிந்திருத்தல் அவசியம் என்பதுபற்றியும், உபகரணங்களை உபயோகித்தலின் அவசியம்பற்றியும் எடுத்துரைத்தார்.

பண்டிதர் ஏ. செல்லத்துரை பேசுகையில், பாலர்களுக்கு சமயக்கல்வியின் அவசியம், பாலர் பாடசாலைகளின் அமைப்பு பாலர் பாடசாலைகளின் நிர்வாகம், இக்கல்லூரி ஆற்றி வரும் சேவைபற்றி எடுத்துக் கூறினுர். (கொ-அ)

## நாடும் நடப்பும்

'ஈழநாடு' இருபத்தொரு வயதைப் பூர்த்திசெய்து இருபத்திரண்டாவது வயதில் காலடி எடுத்துவைத்திருப்பதை மகிழ்ச்சியுடன் பெரும் விழாவாகக் கொண்டாட வேண்டாமா என்று 'ஈழநாடு' அன்பர்கள் பலர் கேட்கின்றுர்கள்.

உரும்பராயிலிருந்து எமது வாசகநேயர் ஒருவர் வாடா மலராக கனகாம்பரப் பூக்களைத் தமது வாழ்த்துச்செய்தியுடன் அனுப்பிவைத்திருக்கின்றுர்.


'ஈழநாடு' வளர்ச்சிக்காக உதவியும் ஒத்துழைப்பும் அளித்துவருபவர்களுக்கும் நல்லாசி கூறிவாழ்த்தும் உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

மற்ருெரு மங்களகரமான நிகழ்ச்சி 'ஈழநாடு' தனது இருபத்திரண்டாவது வயதில் காலடி எடுத்துவைத்த தினத்தன்று 'ஈழநாடு' அலுவலகத்தில் பணிபுரியும் முக்கியமான ஊழியர் இருவர் உறவினர்கள், நண்பர்கள் வாழ்த்தி ஆசீர்வதிக்க பதிவுத் திருமணம் செய்து கொண்டனர். இது அவர்கள் வாழ்க்கையில் மட்டுமல்ல 'ஈழநாடு' ஊழியர்களும் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகும்.

எல்லாம் இறைவன் திருவருள்.

0 0 0

பழம்பெரும் எழுத்தாளர் அ. செ.முருகானந்தனுக்கு பிரதேச அபிவிருத்தி இந்துக் கலாச்சார, தமிழ்மொழிச் சட்ட அமுலாக்கல் அமைச்சர் ஐநூறு ரூபாயை அனுப்பி அவருக்கு வாழ்த்துச் செய்தி



யும் அனுப்பியிருப்பது எழுத்தாளர்களுக்கு மட்டுமல்ல இந்நாட்டு மக்கள் அனைவருக்குமே மகிழ்ச்சியளிப்பதாகும். மற்ருெரு செய்தி உரும்பராயிலுள்ள 'ஈழநாடு' அபிமானிகளான இரு சகோதரிகள் பல மாதங்களாக மாதா மாதம் அ. செ. மு.வுக்கு அன்பளிப்பு அனுப்பி வருகின்றனர். அவர்களை இவருக்கு யாரென்றே தெரிந்திருக்காது.

இன்னும் எத்தனையோ எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக்களை நூல் வடிவில் வெளியிட முடியாமல் கவலையுடனிருக்கின்றனர். இவர்களுடைய ஆக்கங்களையும் நூல் வடிவில் கொண்டுவருவதற்கு சுலபமான கடன்வசதியாவது செய்து கொடுக்க எழுத்தாளரான அமைச்சர் இராசதுரை முன்வருவாரென்று எதிர்பார்க்கலாமா?

-- ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

''வெளிநாடுகளுக்கு தொழில்தேடிச்சென்றாலும்

# 'தமிழ்ஈழ'த்தின் துணிகளையே வாங்கமுன்வர வேண்டும்''

## தமிழ் இளைஞர் பேரவை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

'வெளிநாடுகளுக்குதொழில் தேடிச் சென்றவர்கள் பெருமளவில் உடுபிடவைகளை நம்நாட்டுக்குக் கொண்டுவந்து குவிக்கிறார்கள். அவர்கள் தம் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அந்நிய துணிகளை அன்பளிப்புச் செய்கிறார்கள். இந்நிலை முற்றாக மாறவேண்டும், வெளிநாடுகளுக்குத் தொழில் தேடிச்சென்ற தமிழர்கள் தமது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுக்கும் அன்பளிப்புகளை 'தமிழ் ஈழ' உற்பத்திகளாக வாங்கிக் கொடுக்க வேண்டும். அதுவே அவர்கள் தமிழ் இனத்திற்குச் செய்யும் பெரும்நன்மையாகும்.''

தமிழ் இளைஞர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை சிவராத்திரி தினத்தன்று தமிழ்இளைஞர் பேரவையினர் 'தமிழ் ஈழ உற்பத்தி நெசவு ஆடைகளை விற்பனை செய்யும் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கிறது. இது தொடர்பாக பேரவைவெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் ஈழம் என்றும் ஆடை உற்பத்தியில் பின்னின்றதில்லை போர்த்துகேயர் காலத்திற்கு முன் நெடுந்தீவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பிரதான பொருள் நூல் ஆகும். யாழ். குடாநாட்டில் அக்காலத்தில் ஏராளமாக சாயம் காய்ச்சும் தொழிலும் நெசவுத் தொழிலும் இயங்கின. உள்ளூர் உற்பத்திப் புடைவைகளை முத்திரைச்சந்தியில் முத்திரை குத்தி நாகபட்டினத்திற்கு ஏற்றுமதி செய்தது அந்தக் காலம். அக்காலத்தில் அதனோடு பருத்தியுடன் சம்பந்தப்பட்ட கிராமங்களுக்குப் பருத்தி அடைப்பு. பருத்தி வேலி, பருத்திக்குடியிருப்பு, பருத்தித்துறை, பருத்தித்தீவு என ஊர்கள் வழங்கின.

ஆனால் அந்நியர் படையெடுப்பிற்குப் பின்னர் நிலைமைதலைகீழாக மாறிவிட்டது. துணிகளை ஏற்றுமதி செய்த தமிழ் ஈழம் அந்நியரிடமிருந்து அவற்றை இறக்குமதி செய்யும்நிலை ஏற்பட்டுவிட்டது. அந்நியர் வியாபார நோக்கத்திற்காகவும் ஏகாதிபத்திய நோக்கத்திற்காகவும் தமக்கு அவசியமானவற்றையே இங்கே உற்பத்திசெய்தார்கள். இங்குமக்களுக்குத் தேவையானவற்றை இறக்குமதிசெய்து குவித்து அவற்றை விற்றுப் பெரும் இலாபம் ஈட்டினர். இதனால் மக்கள் சுரண்டப்பட்டனர்.

இன்றும் அந்நியநாடுகளிலிருந்து ஏராளமான துணிகள் இறக்குமதியாகின்றன. பொருளாதார அடிமைத்தனத்தில் நாம் மூழ்கியிருப்பதால் ஏராளமான பணம் வெளியே போகிறது, நம்நாடு குட்டிச் சுவராகின்றது.

தமிழ்ஈழம் இன்று சுதந்திரம் பெறாமல் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறது. ஆனால் சிங்கள நாடும் சுதந்திரம் பெற்றுவிட்டாலும் இன்று அது ஒரு நவகாலனியாகவே இருக்கிறது. ஏகாதிபத்திய நாடுகளின் நவகுடியேற்ற நாடாக இருப்பதால் தான் சிங்கள நாடு உற்பத்தி செய்யக்கூடிய பண்டங்களையே தான் உற்பத்திசெய்யாது அந்நியநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது, அந்நிய முதலாளிகளின் ஏஜண்டாக இருக்கும் ஐ தே கட்சி ஆட்சியிலிருப்பதால் தமிழ் ஈழத்திலும் சிங்களநாட்டிலும் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு மக்கள் சுரண்டப்படுகிறார்கள். இச்சுரண்டலுக்கு இடமளிக்கும் ஆட்சியாளரும் அதில் ஒரு பங்கை அனுபவிக்கிறார்கள்.

### தமிழர்களும் சுரண்டப்படுகின்றனர்

எது எவ்வாறிருப்பினும் தமிழ் ஈழம் சிங்கள நாட்டிற்கு அடிமைப்பட்டிருப்பதாலும் சிங்களநாடு ஏகாதிபத்திய நாடுகளின் நவகாலனியாக இருப்பதாலும் தமிழராகிய நாங்களும் சுரண்டப்படுகிறோம். அந்நியரின் வருகையால் நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாலும் சிங்கள நாடு அரசியல் சுதந்திரம் பெற்ற பின்னர் தேசிய முதலாளித்துவக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியிலிருந்த காலத்தில்இறக்குமதிக் கட்டுப்பாடு காரணமாக நெசவாளர்கள் ஓரளவு சுபீட்சம் அடைந்திருந்தனர். ஆனால் இப்போ அந்நிய முதலாளித்துவவாதிகளின் ஏஜண்டுகளாக இருக்கும் யூ. என். பி ஆட்சியில் மீண்டும் தாராள இறக்குமதியாலும் தவறான பொருளாதாரக் கொள்கையாலும் நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் ஈழத்தின் தென்பகுதிகளான மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நெசவுத் தொழில் செய்யும் வீடுகளில் நிலைமையை நாம் நன்கு அவதானிக்க முடிந்தது. எத்தனையோ வீடுகளில் போடப்பட்டுள்ள தறிகள் சும்மாகிடக்கின்றன பல ஏழை நெசவாளர்கள் கண்ணீர் வடிக்கின்றார்கள். சிறிய நெசவாலைகள் மூடப்பட்டு விட்டதால் அவற்றில் வேலை செய்துவந்த வாலிபர்கள், வனிதையர்கள் வாடுகிறார்கள்.

அதுமட்டுமன்றி சொற்பமாக உற்பத்திசெய்யும் உடைகளையும் நியாயமான விலை கொடுத்துக் கொள்வனவு செய்யாது மலிந்தவிலையில் வியாபாரிகள் முதலாளிகள் தரகர்கள் சுரண்டிக் கொழுக்கிறார்கள். இந்நிலைமையைக் கிழக்குமாகாணத்தில் நேரடியாகக் கண்ட பின்னர்தான் இவ்வாறான விற்பனை இயக்கத்தை உடனே தொடங்க வேண்டுமென்று முடிவெடுத்தோம்.

அந்நியரின் தாராள இறக்குமதியாலும் வெளிநாடுகளில் தொழில் பெற்றிருக்கும் தமிழர்கள் துணியைக் கொண்டு வந்து குவிப்பதாலும் மக்கள் அந்நியத்துணிகளில் மோகம் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. யார் எதைஇறக்குமதி செய்தாலும் குவித்தாலும் விடுதலை உணர்ச்சியால் உந்தப்படுபவர்கள் நம் நாட்டு மக்களுக்கு வாழ்வளிக்க பேரவைக்கு ஆதரவளிப்பர் என்று எமக்கு நம்பிக்கை உண்டு.

இன்று நம்நாட்டு மக்கள் அந்நியத்துணிகளைப் பாவிப்பதற்கு காரணங்கள் சில கூறப்படுகின்றன. சலவை செய்து பாவனை செய்வதற்கு வசதியாகவும் மென்மையாகவும் சில மலிவாகவும் கிடைப்பது அந்நியத் துணிகளில் ஒரு கவர்ச்சியை ஏற்படுத்துவது உண்மைதான்.

இருந்தாலும் பாவனைக்கு உகந்ததாகவும் அந்நிய நாட்டு துணிகளுக்கு நிகராகவும் நம் நாட்டு மின்தறி உற்பத்தி ஆடைகள் வந்துவிட்டன. அவற்றை நாம் பாவிக்கலாம் உடனடியாக ஆடைகளையே தனியாகப் பாவிக்க வசதி இல்லாவிட்டாலும் அவற்றில் ஒன்றைத்தானும் விலைகொடுத்துவாங்கவும் அரைவாசி பாவிக்கவும் படிப்படியாக சுதேசி உற்பத்தியையே முழுவதும் பாவிக்கவும் முன்வர வேண்டும்.

அத்துடன் தமிழ்ஈழத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் நூற்ற நூலைக் கொண்டு கைத்தறிகளில் நெய்யப்பட்ட முரடான ஆனால் அழகான ஆடைகளையும் நாம் பாவிக்க வேண்டும். அந்தத்துணிகளின் மீது உள்ளமோகத்தை தியாகம் செய்வது சுதேசமக்கள் தமிழ்மக்கள்பலர் வாழ வழிவகுக்கும் அத்துடன் தமிழ் ஈழம் விடுதலைபெற வழி கிடைக்கும். (கொ-இ)

---

### குவைத் சிறையில் இலங்கைப் பெண்கள்

குவைத்நகர், பெப்.12

குவைத்தில் 68 இலங்கைப் பெண்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர் என்று குவைத் நாட்டிலிருந்து வெளிவரும் ''அராப்டைம்ஸ்'' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

சமூகச் சட்டங்களை மீறியது சம்பந்தமாகவே இவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளதாக மேற்படி பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த அக்டோபர் மாதமே குவைத்தில் ஆகக் கூடியளவு குற்றச் செயல்கள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிய வருகிறது. இக்குற்றச் செயல்களில் அரைவாசி கல்வியறிவில்லாத மக்களினால் மேற்கொள்ளப் பட்டதாகவும் குவைத் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (வெ)

---

சட்டத்தரணி கொலை:

# ஐந்து சந்தேக நபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டத்தரணி அலோசியஸ் கொலை தொடர்பாக மற்றொரு சந்தேகநபரான சிங்கராசா பாஸ்கரன் கைதுசெய்யப் பட்டு, நேற்றுமுன்தினம் யாழ் மேலதிக நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது சந்தேகநபரை றிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இக்கொலை தொடர்பாகப் பொலிஸார் மற்றொரு சந்தேக நபரான கருணை என்பவரையும் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

இதுவரை இக்கொலை தொடர்பாகச் சந்தேகநபர்களான பாஸ்கரன், சிறி, ராசலிங்கம், ராதா கருணை ஆகியஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பான விசாரணை இம்மாதம் 19ம் தேதி வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. (சு-அ)

---

## ஹெலிகொப்டர் பாவிக்க அரச ஊழியருக்குத்தடை

(கொழும்பு)

அவசரகால நிலைமைகளைத் தவிர ஏனைய நாட்களில் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஹெலிகொப்டர்களைப் பாவிப்பதை அரசாங்கம் தடைசெய்துள்ளது.

ஹெலிகொப்டர்கள் இயங்குவதற்கு அதிகளவு பணம் தேவைப்படுவதால் அத்தியாவசிய நேரங்களில் தவிர மற்றும் வேளைகளில் ஹெலிகாப்டர்களைப் பாவிக்கவேண்டாமென ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசாங்க அதிகாரிகளைக் கேட்டுள்ளார். (கொ-அ)

---

### 'மாணவர் கைத்திறன் வெளிப்பட...'

(அரியாலை)

'பாடசாலையின் வளர்ச்சி அதிபர், ஆசிரியர்கள், மாணவர், பெற்றோர் ஆகியோரின் ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது. முழுவதுமாக மாணவர்களால் செய்யப்பட்ட இந்தப் பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ள பொருட்கள் கண்ணுக்கு ரம்மியமாகவும், சிந்தனைக்கு வித்தாகவும் அமைகின்றன. இப்பாடசாலை நகரத்திற்கு அண்மையில் இருந்த போதிலும், கிராமத்தின் அமைதியான சூழ்நிலையில் மாணவர்க்கு நற்சேவை ஆற்றி வருவதை நான் பாராட்டுகிறேன்''

இவ்வாறு யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜெகநாதன் நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. துரைசுவாமியால் மலர் மாலை சூடி மேலதிக அரசாங்க அதிபர் வரவேற்கப்பட்டார். மேலதிக அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில், இவ்வாறான பொருட்காட்சிகளை ஒழுங்குசெய்வதினால் மாணவர்களினது கைத்திறனும் கலைத்திறனும் வெளிப்படுவதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது என்றார்.

பொருட்காட்சித் திறப்பு விழாவின் பின்னர் வித்தியாலய அதிபரும், ஆசிரியர்களும் மேலதிக அரசாங்க அதிபருக்கு [illegible] (அ)

---

## ஆசிரியசங்கத்தின் மூலகர்த்தா ஆசிரியமணி இரத்தினம்''

(யாழ்ப்பாணம்)

''இன்று பலம்வாய்ந்த ஆசிரியர் சங்கமாய் விளங்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தினதும் அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினதும் ஒன்றிணைப்பேயாகும். அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் வரலாற்றைத் திரும்பி நோக்குவோமாயின் வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் பெருமைகளைக் காணலாம். பழைமையும் பெருமையும் வாய்ந்த வட இலங்கைத் தமிழாசிரிய சங்கத்தின்மூலகர்த்தாக்களில் மூலகர்த்தா உடுப்பிட்டி ஆசிரியமணி திரு. றிச்சேட் இரத்தினம் ஆவார். அவரது முயற்சியால் 1921ல்ஸ்தாபிக்கப்பெற்ற சுதேச பாஷாபிமான சபையே வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கமாகி, பின்னர் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கமாய்ப் பரிணமித்தது''.

உடுப்பிட்டி ஆசிரியமணி வி. ஆர். இரத்தினம் இயற்கை யெய்திய ஞான்று நடைபெற்ற இரங்கலுரை அரங்கில் உரையாற்றிய அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க முன்னாள் செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. பஞ்சாட்சரம் மேலும் குறிப்பிடுகையில்,

அவர் மேலும் பேசுகையில் தெல்லிப்பளை போதனாசிரியர் கலாசாலையில் பணியாற்றிய அமரர் இரத்தினம் ஊர் ஊராக கால்நடையாகவே சென்று ஆசிரியர்களை சந்தித்து சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்தார். தலைவராய்- காரியதரிசியாய் இருந்து ஆசிரியர்சங்கமூலம் எடுத்த பெரு முயற்சியால் ஆசிரியர்கள் சம்பளத்திட்டம் வளர்ச்சியடைந்துவந்தது. அவர் ஆற்றிய அரும்பெரும் சேவையால் ஆசிரியமணிப்பட்டம் அவரைச் சென்றடைந்து சிறப்புப்பெற்றது'' என்றார்.

இளைப்பாறிய அதிபரும் பிரபல ஆசிரிய தொழிற்சங்கவாதியுமான திரு. க. இ. குமாரசாமி பேசுகையில், ஆசிரியர் உலகுக்கு அரும்பணி புரிந்து தொண்ணூற்றேழு ஆண்டுகள் வாழ்ந்த ஒரே ஒருவர் திரு. வி. ஆர். இரத்தினம் என்றார்.

திரு. ஈ. டி. இராசரத்தினமும் பேசினார். பண்டிதர் நீ. சி. முருகேசு இரங்கற் பாமாலை வாசித்து உரையாற்றினார். (கொ-அ)

......

### விசேட பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் பறாளை ஸ்ரீசிவசுப்பிரமணியசுவாமி ஆலய திருப்பணிச்சபையின் விசேட பொதுக்கூட்டம் பொறியியலாளர் திரு. எ. இராஜரட்சம் தலைமையில் இம்மாதம் 16ம் திகதி பிற்பகல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோவில் புதிய தேர்த்திருப்பணி பற்றியும், இராஜகோபுரம் அமைப்பது பற்றியும் இக்கூட்டத்தில் கலந்துரையாடல் நடைபெறும். (+)

......

### லூர்த்துமாதா உற்சவம்

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை புனித லூர்த்து மாதா ஆலய வருடாந்த நவநாட் திருவிழா கடந்த 11ம் திகதி காலை நடைபெற்ற கூட்டுப் பலிப்பூசை ஆராதனையுடன் நிறைவுபெற்றது.

10-ம் திகதி இரவு திருச்சொரூப சுற்றுப் பிரகார ஆராதனையும் இடம் பெற்றது. (=)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேலை வங்கிப் படிவங்களினூல்

# பொதுமக்கள் எதிர்ப்பை கூட்டணி சம்பாதித்தது"

## உடுப்பிட்டி எம். பி. உரை

(நெல்லியடி)

வேலை வங்கிப் படிவங்களை தமிழர் விடுதலைக்கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடமிருந்துபெற்று விநியோகித்ததன் மூலம் பொதுமக்களின் எதிர்ப்பையும் வதனையையும் பரிசாக பெற்றுள்ளார்கள்.

உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம், கரவெட்டி மேற்கு த. வி. கூட்டணியின் புனரமைப்புக்கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

டாக்டர் திரு. எஸ். பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. த. இராசலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது: வேலைவங்கிப் படிவங்களைஎம்மிடமிருந்துபெற்ற எவருக்குமே வேலை வாய்ப்பு வழங்கப்படவில்லை. நிந்நிலையில் உத்தியோகத்திற்காக அரசாங்கத்திடம் மண்டியிடமாட்டோம். உத்தியோகத்திற்காக மண்டியிடுவதென்பது சுதந்திரத்திற்காக போராடும் ஒவ்வொருவரினதும் பலத்தை பலவீனப்படுத்தும் செயலாகும்.

தமிழீழ போராட்டத்திற்காக பற்பல தந்திரோபாயங்களை கையாளவேண்டியேற்படும். அகதிகள் புனர்வாழ்வு நிதிக்கு உடுப்பிட்டித் தொகுதியிலிருந்து ஒரு சதமும் சேகரிக்கப்படாததற்கு தனது கவலையை தெரிவிக்கிறேன்.

உடுப்பிட்டித் தொகுதி த. வி. கூட்டணிக் கிளைச் செயலாளர் எஸ். பாலசிங்கம், எ. சி. ஞானம், எஸ். செல்லத்தம்பி ஆகியோரும் உரையாற்றினர்.

திரு. கே. கிருஷ்ணமூர்த்தி மேற்படி கரவெட்டி மேற்குக் கிளையின் புதிய செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (ச

---

"கடற்றெழிலாளருக்கு

## சிறந்த எதிர்காலம் காத்திருக்கிறது"

(பண்டத்தரிப்பு)

"கடற்றொழிலாளர்களுக்கு இந்நாட்டில் சிறந்த எதிர்காலம் காத்திருக்கிறது. கடலட்டை, சிங்கஇறால், சங்கு போன்றவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் எமது பகுதி கடல் தொழிலாளர்கள் அதிக பணத்தை சம்பாதிக்க முடியும்".

இவ்வாறு மானிப்பாய்த் தொகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபைக் கூட்டத்திற்கு தலைமைவகித்து உரையாற்றுகையில் சங்கத் தலைவரும், வலிதென் மேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபருமான திரு. கே. கோபாலரத்தினம் குறிப்பிட்டார்.

சண்டிலிப்பாயிலுள்ள வலிதென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற இச்கூட்டத்தில் சங்கத்திற்கு நிரந்தர கட்டிடம் நிறுவுவதற்கு மக்கள் வங்கியிடமிருந்து இரண்டு லட்சம் ரூபாவைக் கடனுகக் கோருவதென்றும், சங்க உறுப்பினரிடமிருந்து சங்க மூலம் கணவாய் இறால் போன்ற மீன்வகைகளை கொள்வனவுசெய்து விற்பனை நிலையத்தின் மூலம் சந்தைப்படுத்துவது என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தின் உபதலைவராக திரு. ம. பாலநாதனும், செயலாளராக திரு. ஞா. அன்ரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மானிப்பாய்த் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளரும், சங்க இயக்குநர் சபை உறுப்பினருமான திரு. எஸ். அலோசியஸ், மக்கள் வங்கி வடபிரதேச முகாமையாளர் திரு. எம். கணேசசுந்தரம் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். (க)

---

## "அதிகவர்ணனை கதையின் உயிரைக் கெடுத்து விடும்"

(நெல்லியடி)

கதைகளில் தேவைக்கு அதிகமாக இடம்பெறும் வர்ணனைகள் பாத்திரங்களின்உயிரைக் கெடுத்துவிடுவதோடு கதைகளின் சிறப்புத் தரத்தினையும் குறைத்துவிடுகின்றது. கதையின் நடை நன்ருக இருந்து அடித்தம் இல்லாமல் போய் விடுவது கவலைக்குரியது.

நெல்லியடி செயின்ஸ் கலாசாலையில் இடம்பெற்ற செளிவத்தை யோசப்பின் 'நாமிருக்கும் நாடு' விமர்சன அரங்கில் பிரபல எழுத்தாளர் திரு. கே. டானியல் பேசுகையில்மேற்கண்டவாறு கூறினூர்.

'தேன்கூடு'ஆசிரியர் நெல்லை ஐ. நடேஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விமர்சன அரங்கில் யாழ். பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த திரு. மு. நித்தியானந்தன் பதிலுரை நிகழ்த்துவகயில் தெரிவித்ததாவது:

மலைநாட்டுத் தமிழர்களின் உரிமைகளுக்காக தலைவர்கள் அந்தக்காலத்தில் போராடியிருந்தால் இந்தத் தமிழர்கள் இந்நாட்டை தாய்நாடாக கருதியிருப்பார்கள். வர்த்தகப் ரோட்டத்தின் சிறந்த வீரர்களாகவும் மாறியிருப்பார்கள். சிறிய வட்டமொன்றிற்குள் வசித்த இம்மக்கள் திடீரென மாக்சிய கொள்கைப் பிடிப்பாளராகவோ ஆதரவாளராகவோ மாறமுடியது. 'நாமிருக்கும் நாடே' ஆசிரியர் மாக்சிஸ்ட் அல்ல. எனினும் மக்களின் நிலையை. இந்நாட்டை வெளியேறும் எண்ணத்தை - குடியேற்ற காலத்து யாழ்ப்பாணத்தார் நிலையை எடுத்துள்ளார். இது யாழ்ப்பாண எதிர்ப்புக் கதையல்ல என்பது உண்மையாகும்.

எமது எமது பல்கலைக் கழகங்கள் கலை, இலக்கிய நாடக கர்த்தாக்களை உருவாக்கவில்லை. அவ்வாறு தொடர்பில்லாத நிலையொன்று காணப்படுகின்றது. ஆறுமுக நாவலருக்கு விழா எடுப்போர் இந்நூலுக்கு விமர்சனம் செய்ய முன்வராதது வேதனைக் குரியது."

மற்றும் சமர் ஆசிரியர் டானியல் அன்ரனி, ஆசிரியர் கே. தங்கவடிவேல் ஆகியோரும் விமர்சன உரை வழங்கினூர்கள். (ச)

---

### ஜி. ஜி. நினைவாக அன்னதாம்

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் 3வது சிரார்த்த தினத்தையொட்டி பெட்டுக்கோட்டை எம். பி. திருநாவுக்கரசுவினூல் தொண்டமானூறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்வைபவத்தில் கிளிநொச்சித்தொகுதி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியும் கலந்துகொண்டார்.

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் சிரார்த்த தினத்தை முன்னிட்டு நாவாந்துறை புனித நிக்கிலஸ் ஆலயத்திலும் அன்னதானம் வழங்கப்பட்டதுடன் திருப்பலி பூசையும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. (கொ-அ)

---

"யாழ். ஆஸ்பத்திரி வீதி

## வேலையை இடையில் நிறுத்தியது சரியல்ல"

### யாழ். முதல்வருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

"யாழ். ஆஸ்பத்திரி வீதி திருத்த வேலையை உண்மை நிலை அறியாமல் நிறுத்தியப்பது ஒரு சரியான நடவடிக்கையாகத் தெரியவில்லை."

வீதிவேலை ஒப்பந்தகாரரான திரு. த. இ. பாலசுந்தரம், யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விஸ்வநாதனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"ஆஸ்பத்திரி வீதி திருத்த வேலை சம்பந்தமாக நீங்கள் மேற்கொண்ட திடீர் நடவடிக்கை காரணமாக, பொது மக்கள் மத்தியில் தவறுன எண்ணமும், வீண்சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

உங்கள் மேலான கவனத்துக்கு நான் சமர்ப்பிக்கும் பின்வரும் தகவல்களை மனதிற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

எனக்கு இவ்வேலை ஒப்பந்தத்தில் கொடுபட்டு, கணியச் சிட்டை விபரத்தில் கொடுக்கப்பட்ட விபரப்படி நானும் வேலைசெய்துகொண்டிருந்தேன் இவ்வேலையைப் பற்றியும் செய்முறைபற்றியும் குறைகூறுவோரும் முதலில் எனக்கு வழங்கப்பட்ட சிட்டையைப் பரிசீலித்திருக்கவேண்டும். அத்தோடு பொறியியலாளர் எனக்கூறிக்கொண்டு குற்றம் கண்டவர் திரு. கன்னுவினூல் எழுதப்பட்ட குடிசார பொறியியலாளரின் கைபடக்கப்புத்தகத்தில் பக்கம் 18/ 9ல் உள்ள வாசகத்தைப் படிக்கவில்லைப்போலும். அல்லது அதிற் கூறப்பட்ட செய்முறையை அவருக்குத்தெரியாமல் இருந்திருக்கலாம். இதனூல்தான், அந்தப்பொறியியலாளரின் கூற்றைக்கேட்டு நகரமுதல்வர் வேலையை நிற்பாட்டியுள்ளார். உண்மை இதுவாயிருக்க 'ஜில்மால்' வேலை எனச்சந்தேகக் கண்கொண்டு என்னையும் யாரோ ஓர் அதிகாரியையும் பிணைத்து பத்திரிகையில் வந்தசெய்தி என்னை ஏளனப்படுத்துவதாகவும், எனக்குக்களங்கம்விளைவிப்பதாகவும் உள்ளது. எனவே, சரியான செய்முறையை அறிய அப்புத்தகத்தில் கூறப்பட்ட செய்முறையை, அந்தப்பொறியியலாளரையும், நகர முதல்வரையும் வாசித்தறியும்படி கேட்டுக்கொண்டு, மக்களும் தங்களுக்கு இருக்கும் சந்தேகத்தை நீக்கும்படி வேண்டுகிறேன்." (க)

---

### அச்சுவேலி வடக்கில் மாதர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வடக்கில், மாதர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அச்சுவேலி சிறுகைத் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு. க. நா. கணபதிப்பிள்ளை தலைமையில் நடந்த இவ்வங்குரார்ப்பணக் கூட்டத்தில், மாதர் சங்கத் தலைவியாகத் திருமதி திலகேஸ்வரி அருமைநாயகமும், செயலாளராகத் திருமதி அ. கணபதிப்பிள்ளை ஆசிரியையும், பொருளாளராகத் திருமதி லீலா தங்கவடிவேலுவும், துணைத் தலைவியாகத் திருமதி வசந்தமலர் தேவராசாவும், துணைச் செயலாளராகச் செல்வி இந்திராணி கந்தையாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மற்றும் பதினெரு பேர் கொண்ட செயற்குழு உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

......

### இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் பிறப்பு இறப்பு பெரும்பகுதி அலுவலக பிரதம எழுதுவினைஞர் திரு. எஸ். துரைராசா யாழ் காணிப் பதிவு அலுவலகத்திற்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு கிளிநொச்சி நீர்ப்பாசன இலாகாவில் கடமையாற்றிய திரு. வி. கணபதிப்பிள்ளை இடமாற்றம் [illegible]

---

ஸ்ன்முகப்படுத்தப்பட்டவரவு செலவுத்திட்ட

நிதி ஒதுக்கீடு:

## யாழ். மாவட்ட எம். பிக்கள் வெள்ளியன்றுகூடி ஆராய்வர்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் தொகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி இறுதி முடிவுஎடுக்கும் முக்கிய கூட்டம் எதிர்வரும் 15ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ் அரசாங்க செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கூன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## சுருட்டுத்தொழிலுக்கு புத்தூக்கம்அளித்தவர் ஜி.ஜி.

(யாழ்ப்பாணம்)

"1965-ம் ஆண்டு அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட 5 சதவீத சுருட்டு உற்பத்தி வரியை அன்று ஆட்சியிலிருந்த நிதி அமைச்சருடன் பேசி உற்பத்தி வரியை ஒரு சதவீதமாக்கி சுருட்டுத் தொழிலுக்கே புத்தூக்கம் கொடுத்தவர் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம்"

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் 3-வது சிரார்த்த தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்டகூட்டத்தில் திரு.மா. முதலியார் தமது தலைமை உரையில் மேற்கண்டவாறு கூறினூர்.

தாவடியிலுள்ள இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. முதலியார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "அமரர் பொன்னம்பலம் வாழ்ந்த காலத்தில் சுருட்டுத் தொழிலாளர்களின் உற்ற நண்பனுக விளங்கினூர். அவர் சுருட்டுத் தொழிலாளருக்கும் ஏனைய தொழிலாள வர்க்கத்திற்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியது. அவரால் உருவாக்கப்பட்ட இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கம், அவரது இலட்சியத்தை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.

"இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கம், அமரர் ஜி. ஜி. காட்டிய பாதையில் நின்று தொழிலாளர்களின் நன்மைக்காகப் போராடிவருகிறது. சங்கம் மேற்கொண்ட போராட்டத்தின் பயனுகச் சுருட்டுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படாதிருந்த சம்பளப் பாக்கியில் சுமார் 90 ஆயிரம் ரூபாவை 275 சுருட்டு முதலாளிகள் வழங்கியுள்ளனர். 275 தொழிற்சாலைகள், சம்பளப் பாக்கிப்பணத்தைக் கொடுத்தபடியால் சுருட்டுத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பிவிட்டனர். ஏனைய சில சுருட்டு முதலாளிமாரும் வெகுவிரைவில் கணக்குத் தீர்க்கவுள்ளனர். ஆதலால் சகல தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பக்கூடியநிலை உருவாகியுள்ளது.

"அன்று அமரர் ஜி. ஜி. யினூல் ஒருசதவீதமாக்கப்பட்ட உற்பத்தி வரி, இன்று 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி வரியைக் குறைக்க எந்த ஒரு எம். பி. யும் முயற்சிக்கவில்லை. ஆதலால் சுருட்டுத் தொழிலாளர்களினதும் நலன்களைக் கவனிப்பதற்கு எமது சங்கப்பிரதிநிதி ஒருவரை வருங்காலத்தில் எம். பி.யாகத் தெரிவுசெய்ய வேண்டும்." (வெ ா)

......

### இன்று கூடி ஆராய்வர்

(உடுப்பிட்டி)

கத்தோலிக்க தனியார் பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த அதிபர்களுக்கான மாநாடு ஒன்று இன்று 13ந் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

கொழும்பு அதிமேற்றிராணியாரின் இல்லத்தில் நடைபெறும் இம்மாநாட்டில் தனியார் பாடசாலைகள், கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராயப்படும் (அ)

---

### கொழும்பில் ஜெமினி கணேசன்

(கொழும்பு)

தமிழகத்தின் பிரபல நடிகர் ஜெமினி கணேசன் தனிப்பட்ட விஜயமொன்றினை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

நடிகர் ஜெமினி கணேசன் இலங்கையில் ஒரு வாரகாலம் தங்கியிருப்பார் என்றும் தெரிய வருகிறது. (வெ-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஷாவை விசாரிக்க சர்வதேசக் கமிஷன் நியமிக்கப்பட்டால்

# பணயக் கைதிகளுக்கு விடுதலை

### ஈரான் ஜனாதிபதி அறிவிப்பு

தெஹ்ரான், பெப். 12

ஈரானிய ஷாவின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்ய சர்வதேசகமிஷன் நியமிக்கப்படும் பட்சத்தில் மாணவர்களால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க பணயக் கைதிகள் இன்னும் சிலதினங்களில் விடுவிக்க முயற்சி எடுக்கப்படும்.

இவ்வாறு ஈரானிய அதிபர் ஜனாப் பாணிசதார் தெரிவித்துள்ளார்.

பாரிஸ் சஞ்சிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஈரானை ஒரு சுதந்திர நாடாக அமெரிக்கா அங்கீகரித்தால் பணயக்கைதிகளை விடுவிக்கும் முயற்சியை இது இலகுவாக்கும் என்றும் ஜனாப் சதார் தெரிவித்துள்ளார். (இ)

## பிரச்சினைகளைத்தீர்க்க அமைதிவழி நாடினால்

# பாகிஸ்தான் மீது ஆப்கான் படைபலத்தைபிரயோகிக்காது

### அரசு அறிக்கை

காபூல், பெப். 12

ஆப்கானிஸ்தானுடனான சகல பிரச்சினைகளையும் அமைதியானமுறையில் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ள பாகிஸ்தான் விரும்புமேயானால் பாகிஸ்தானுக்கு எதிராக ஆப்கானிஸ்தான் படைபலத்தைப் பயன்படுத்த மாட்டாது.

இவ்வாறு ஆப்கான் அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவின் விசேட தூதுவர் திரு. எஸ். கே. சிங்குடன் ஆப்கான் நெருக்கடி குறித்து ஆப்கான் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியபின்னர் ஆப்கான் அரசு மேற்கண்டஅறிக்கையை விடுத்திருந்தது.

ஆப்கான் அதிபர் ஜனாப் கார்மல் வெளிநாட்டமைச்சர் உட்பட பல அதிகாரிகளுடன் திரு. சிங் பேச்சுநடத்தினார்.

பாகிஸ்தானுடனான சகல பிரச்சினைகளையும் அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ளவே ஆப்கான் அரசு விரும்புகிறது. அதேபோன்று பாகிஸ்தான் மக்களின் விருப்பப்படி பாகிஸ்தானும் நடந்து கொள்ளும் என்று ஆப்கான் அரசு நம்பிக்கைகொண்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## காந்தி, நேரு கொள்கைகளை

# திருமதி காந்தி கடைப்பிடித்தால் அர்ஸ்காங்கிரஸ் அரசை ஆதரிக்கும்

### வை. பி. சவான் கூறுகிறார்

பம்பாய், பெப். 12

மகாத்மாகாந்தி, ஜவஹர்லால்நேரு ஆகியோரின் கொள்கைகளைப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பின்பற்றுவாரேயானால் இந்திராகாங்கிரஸ் அரசை அர்ஸ்காங்கிரஸ் ஆதரிக்கும்.

இவ்வாறு அர்ஸ்காங்கிரஸ் பாராளுமன்றக் குழுத்தலைவர் திரு. வை. பி. சவான் தெரிவித்துள்ளார்.

பம்பாயில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'ஜனநாயகவாதி' என்று திருமதி காந்தி தம்மைக் கூறிக்கொள்வது, இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத மாநில அரசுகள் தொடர்பாகக் கைக்கொள் ளும் கொள்கையைப் பொறுத் ததே என்றும் திரு. சவான் கூறினார். (இ)

# பேராசை பிடித்த அரசியல் வாதிகள்.....

### அன்னை திரேசா சாடுகிறார்

புதுடில்லி, பெப். 12

பேராசைபிடித்த அரசியல் வாதிகளே உலகில் பதட்ட நிலையைத் தோற்றுவிக்கின்றனர்,

இவ்வாறு நோபல்பரிசு பெற்ற அன்னை திரேசா தெரிவித்தார்.

மத்தியப்பிரதேசத்தில் நிருபர்கள் மத்தியில் அவர் மேலும் பேசுகையில், கடவுளின் படைப்புக்களை போற்றிப் பாதுகாக்க முடியாவிடினும் அவர்களுக்கு அரசியல் வாதிகள் ஊறுவிளைவிக்கக் கூடாது என்றும் அவர் கூறினார். (இ)

## புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்க உத்தரவு

புதுடில்லி, பெப். 12

அஸாம்மாநில சட்டசபைத் தேர்தலுக்கு முன் புதிய வாக்காளர் பட்டியலைத் தயாரிக்குமாறு மத்திய அரசு மாநில அரசைக் கேட்டுள்ளது.

அஸாம் மாநில வாக்காளர் பட்டியலில் வெளிநாட்டினரின் பெயர்கள் இடம்பெற்றிருப்பதாகவும் அவர்களின் பெயரை உடனடியாக பட்டியலிலிருந்து நீக்கவேண்டும் என்று கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததும் அதை அடுத்து கடந்தபொதுத் தேர்தலில் வாக்களிப்பு அம் மாநிலத்தில் ரத்துச்செய்ததும் தெரிந்ததே. (இ)

## 1600 ஆசிரியர்கள் கைது!

சென்னை, பெப். 12

தமிழ்நாட்டில் சம்பளவு உயர்வு, வேலை உத்தரவாதம் கோரி அரசு அலுவலகங்களின் முன் மறியல் போராட்டம் செய்த 1600 ஆசிரியர்கள் கைதுசெய்யப்பட்டனர். (இ)

## டிட்டோ உடல் நிலை

# இருதய பலவீனத்தால் நோய்குணமடைவதில் சிக்கல்

பெல்கிரேட், பெப். 12

யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோவுக்கு அஜீரணம், சிறுநீரகக் கோளாறு, இருதயம் பலவீனம் ஆகிய நோய்கள் காரணமாக அறுவை சிகிச்சையினால் ஏற்பட்ட ரணம் குணமடைவதில் சிரமம் காணப்படுவதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

87 வயதான மார்ஷல் ஜோசிப் புறஸ் டிட்டோ நீண்டகாலம் உயிர் வாழ்வார் என்பது சந்தேகத்திற்கிட

(7-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராத்திரியன்று நள்ளிரவுக் காட்சி உண்டு
**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். - பத்மினி
**அரசிளங்குமரி**

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஜெயசித்ரா
**உங்கள் விருப்பம்**
(புதிய பிரதி)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ராஜன்-புஷ்பலதா நடித்த
**புகுந்த வீடு** (புத்தம்புதிய பிரதி)

**லிடோ** (யாழ். நகர்) தினசரி: 10-30, 2-30, 6-30 & 9-30
போன்: 7693
**தெய்வ மகன்**

கடைசி வாரம்
**ராணி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அலைமோதும் மங்கையர் கூட்டம்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நடித்த சிறந்த காதல் காவியம்
**தேவதாஸ்**
யாழ். நகரில் தேவதாஸ் திரையிடப்படும் கடைசி சந்தர்ப்பம் இதுவே. கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

**SRIDHAR** JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00 and 9-30 p.m.
That "Walking Tall" man is back!
Joe Dow Baker is back As Rugged Hero in
**FRAMED**
(Adults only)
Coming Soon: **BADGE 373**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
கவிதா - சந்திரமோஹன்
நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்மன்ட் கலர்)

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
தேசிய பூங்காவில்... மரணபயம் ஏற்படும் அதிர்ச்சி!
பதினெட்டடி உயரமும் சுமார் 2 ஆயிரம் இருத்தல் எடையும் கொண்ட 'கிறிஷ்லி' என்னும் இராட்சச விலங்கு மனிதனைப் புசிக்கவிருக்கும் பயங்கரம்!
ஐயோ! இப்பொழுது யாழ். நகரிலுமா?
**"GRIZZLY"**
HORROR! TERROR!! SUSPENSE!!! Scope-Color-
- More Suitable For Adults -

**REGAL** (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m
**Fury at Smugglers Bay**
(Color)
From: 15-2-80 ONE FLEW OVER THE CUKOO'S NEST

சிவராத்திரியை முன்னிட்டு நள்ளிரவுக் காட்சியுண்டு
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
ஜெமினி - A. V. M. ராஜன் - காஞ்சனா
**வீர அபிமன்யு**

**மனோஹரா A** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவராத்திரியை முன்னிட்டு நள்ளிரவுக்காட்சி உண்டு
சிவாஜி - சௌகார் ஜானகி
**மகாகவி காளிதாஸ்**

# பாண்டியன்தாழ்வு சம்பவம் கொலையென தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பாண்டியன் தாழ்வு பிரான்சிஸ் யேசுதாசன் மரணம் தொடர்பாக விசாரணை நடத்திய யாழ். மேலதிக நீதவான் திரு. கே. எஸ். மகேசன் கொலை எனத் தீர்ப்பளித்தார்.

யாழ். மேல் நீதிமன்றத்தில் நேற்றுக் காலை மரண விசாரணை, நீதவான் கே. எஸ். மகேசன் முன்னிலையில் தொடர்ந்து நடந்தது.

சந்தேகநபர்களான சுப்பிரமணியம் யோகராசா அல்லது யோகன், சுப்பிரமணியம் சிவானந்தன் அல்லது ஜீவா ஆஜர் செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆஜரானார்.

நேற்றுச் சாட்சியமளித்த சட்ட வைத்திய அதிகாரி பி. திருவுடையார் கூறியதாவது: பிரதான குத்து நடுநெஞ்சில், இதயத்தில் பட்டு, அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியினாலும், இரத்தப் பெருக்கினாலும் மரணம் சம்பவித்தது.

பிரதான காயத்திற்கு உபயோகமான ஆயுதத்தின் வெளியிலிருந்து சென்ற அடையாளமும், இருதயத்தில் பட்ட அடையாளமும் ஒத்துப்போயிருந்தன.

80ம் ஆண்டு பெப். 9ம்தேதி காலை 9மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் சடலத்தைப் பரிசோதனை செய்தேன். பி. வேநநாயகம், க. செல்லத்துரை அடையாளம் காட்டினார்கள்.

விசாரணை முடிவில் நீதவான் கொலையெனத் தீர்ப்பளித்துச் சந்தேகநபர்களை றிமாண்டில் வைக்கக் கட்டளையிட்டு, இம் மாதம் 26ம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

## இன்றைய பலன்

மாசிமாதம் 1-ம் திகதி (13-2-1980) புதன்கிழமை

மேடம்; தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். அறிஞர்களின் தொடர்பும் ஏற்படலாம். புத்திரர் பெருமையுமுண்டு.

இடபம்: தூரத்துப் பயணம் துயரத்தைத் தரலாம். வைத்தியச் செலவுகளும் இடம் பெறலாம். சுகாதாரத்தைப் பேணிநடப்பதுடன்பொறுமை நன்று.

மிதுனம்: பொருளாதார நிலைசீர்பெறும் சிலர் வாழ்க்கையில் களஸ்திரபேச்சும் இடம்பெறும். தொழில்துறையிலும் ஒத்துழைப்புண்டு.

கடகம்: தனிவழிப் பயணத்தைத் தவிர்க்கவும் மேசதிகாரியின் கண்டனங்களுக்கு இலக்காகுவீர்கள். குடும்பப் பிரச்னைகளும் தலைதூக்கலாம்.

சிங்கம்: பெரிய இடத்துச் சிநேகம் இன்று ஏற்படலாம், அரசினர் ஆதரவு முண்டு. வாழ்க்கையிலும் வசந்தம் நிலவும்.

கன்னி: எண்ணிய காரியம் வெற்றி பெறும். வாழ்க்கையில் புதுப்பாதை திறக்கும். மனம் போல் வாழ்வும் உண்டு. முன்னேற்றமான நாள்.

துலாம்: சிலர் வாழ்க்கையில் கடல்கடந்த பிரயாணமும் ஏற்படலாம். வரவிலும் உயர்வு தென்படும். பொதுசனத் தலைமைக்குமிடமுண்டு.

விருச்சிகம்: விரக்திமனப்பான்மையுடன் நடமாடுவீர்கள். அவசரக் கோலம். சிக்கல்களைத் தோற்றுவிக்கும்.

தனுசு: ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும். உணர்ச்சியைத் தூண்டும். ஆசாரக் குறைவும் உண்டு.

மகரம்: வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும். போகன வாழ்வுமுண்டு. முன்னேற வழியமுண்டு. தெய்வவழிபாடு நன்று.

கும்பம்: பல வழிகளிலும் தொல்லை உண்டு. தொழில் நஷ்டமடையும். போக்குவரத்து விடயத்தைத் தவிர்க்கவும்.

மீனம்: புதுமையில் நாட்டம் புதுப்பொலிவு காணும். மாதுரு சுகமும் உண்டு. மக்களால் மகிச்சியுண்டு.

சோதிடக் கலாநிதி
**திருமலை**
**க.வேலுப்பிள்ளை**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவராத்திரியன்று 1-30
நள்ளிரவுக்காட்சி உண்டு
ஆனந்தன்-E.V. சரோஜா
அசோகன்
**வீரத்திருமகன்**
(புதிய பிரதி)

### விலைப்பட்டியல் இல்லை:

## விசாரணையின் பின் எதிரிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

விலைப்பட்டியல் தூக்கவில்லையெனக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். மேலதிக நீதவான் திரு.கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் யாழ். நவீன மார்க்கட் ரகுநாதன் பதிப்பகத்தில், விலைப்பட்டியல் தூக்கவில்லையென இ.ஸ்ரீதரன் க. விஜயநாதன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். யோகேஸ்வரன் ஆஜரானார். விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி மு.சிவபாதசுந்தரம் வழக்கை நடத்தினார்.

79 ஆண்டின் 1ம் இலக்க பாவனையாளர் பாதுகாப்பு சட்டத்தின் 15ம் பிரிவில் உள்ளதுப், விலைப்பட்டியல் தூக்குவது சம்பந்தமான குற்றம் தண்டனைக்குரிய குற்றமல்லவென், எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். யோகேஸ்வரன் சட்டப் பிரச்னையை கிளப்பினர்.

மேலதிக நீதவான் கே.எஸ். மகேசன் அது தண்டனைக்குரிய குற்றம்தான் எனக் கட்டளையிட்டார்.

இதனைத் தொடர்ந்து பரிசோதனை செய்த விலைக்கட்டுப்பாட்டதிகாரி திரு. இ. தர்மகுலசிங்கம், வி. சிவானந்தன், ஆ. அரியரத்தினம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

விசாரணையின்பின் நீதிபதி எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

## கீரிமலைச் சிவன்கோவிலில்
### பார்க்குமிடமெங்கும் சமயப் பேச்சு!

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் சிவநெறிக் கழகத்தினரால், பண்ணிசை, பேச்சுப் போட்டிகள் கடந்த 10ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பெரியளவில் நடாத்தப்பட்டன.

ஐந்து பிரிவுகளாக நடைபெற்ற இசையாளர் - பேச்சாளர்களது ஒலியோசையே ஆலய மண்டபங்களிலும் பிரகாரங்களிலும் மிகுந்து ஒலித்தது.

காங்கேசன்துறை வட்டாரப் பாடசாலைப் பெருமளவில் பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர்கள் இப்போட்டிகளில் கலந்துகொண்டனர்.

பண்ணிசையாளர்கள் தமது திருமுறை ஓதலை மிகுந்த பயபக்திகளோடு நிறைவேற்றி முடித்தமையை ஆலயச் சூழலோடு சார்த்திப்பார்க்கும் போது சற்றுச் சிலிர்ப்பு ஏற்படத்தான் செய்தது.

எங்கும் சைவசமயத்தின் கொள்கைகளை விளக்கம் செய்த மாணவர்களது பேச்சொலி மிகவும் கெம்பீரமாகவே முழங்கி யொலித்தது.

நாதவொலி, கீதவொலி, வேதவொலி, தாளவொலி போன்ற ஒலி முழக்கங்கள் ஒருங்கே பேரொலி பரப்ப நகுலேஸ்வரப் பெருமானுக்கு அபிஷே ஆராதனைகள் நடைபெற்ற திருக்காட்சி என்றும் அடியார்களது நெஞ்சைவிட்டகலாது.

பக்திவிளக்கத்தையும், பண்பு நலன்களையும் எடுத்து விளக்க வேண்டும் என்ற நிலையில் சிவநெறிக்கழகத்தின் இப்பணிகள் பாராட்டப்படவேண்டியவையாகும்.

பெற்றார், மாணவர்கள், அடியார்கள் ஒருங்கே அங்குள்ள மடத்தில் அமுது செய்த காட்சி ஒரு மகாநாட்டுப் பாராளர்களுக்கு உபசாரம் செய்த தன்மையில் அமைந்திருந்தது.

கீரிமலை சிவன்கோவிலில் பாரியதொரு மகாநாடொன்றை நடாத்தி முடித்திருந்தது போன்ற செயற்பாடுகள் இடம்பெறக் காரணகர்த்தராக இருந்தவர்கள் கழகத்தின் செயலாளர்களாவர். திருவாளர்கள் ச. விநாயகரத்தினம், ச. விநாயகமூர்த்தி என்போரே கடந்த ஞாயிறன்று போட்டி மகாநாடொன்றை நடாத்த முன்னின்ற காரணர்களாவர்.

-நாவன்னு

## 'அவ்ரோ' வழக்கு

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஓ. எஸ். எம். செனிவிரத்ன முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட "அவ்ரோ" விமானம் சம்பந்தமான வழக்கு விசாரணை மார்ச் மாதம் 10ந் திகதி வரை பின்போடப்பட்டுள்ளது. (ம)

......

## இருதய...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகவே உள்ளது என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

87 வயதான ஒருவருக்கு ஒரு காலை அகற்றுவதானல் அது சாதாரணமானதல்ல என்றும் அவ்வாறு கால் அகற்றப்பட்டபின்னர் சிறுநீரகக் கோளாறு, இருதய பலவீனம், அஜீரணம் ஆகிய நோய்களுடன் அவர் உயிர் வாழ்வது மிகவும் கடினம் என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவசம்!
G· C. E. (A/L) ஏப்ரல் 80
**கல்விக் கருத்தரங்குகள்**
3 நாட்கள் பெப்ரவரி 15, 16, 17.
அளவையியல் - தமிழ் - பொருளியல்
இந்து நாகரிகம், வரலாறு, அரசியல், கணக்கியல், வர்த்தகமும் நிதியும், தூயகணிதம். பிரயோக கணிதம், இரசாயனம், பௌதிகம், விலங்கியல், தாவரவியல்.
அனுபவமும் ஆற்றலும் மிக்க ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள்,
விபரங்களுக்கு நேரில் வருக!
**திருவள்ளுவர் கல்விக்கழகம்**
Thiruvalluvar Academy
லங்கா சித்தஆயுர்வேத வைத்தியக் கல்லூரி, 127, ஸ்டான்லிவீதி. (ஆரிய குளம் சந்தியிலிருந்து கிழக்காக),
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

# கடன் தொகை அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள், ஸ்க்கூட்டர் ஆகியன வாங்குவதற்கு இதுவரை கடனாக வழங்கப்பட்டு வந்த 7ஆயிரம் ரூபா இவ்வருடம் முதல் 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத் திணைக்களங்களின கடன் வழங்கு சபைகள் மூலம் ஊழியர்கள் இக் கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ)

G. C. E. (A/L) G. C. E. (O/L)
ஏப்ரல் - ஆகஸ்ட்-டிசம்பர் 80/81
கலை, விஞ்ஞானம், வர்த்தகம்
முன்னணிஆசிரியர்கள் விரிவுரையாளர்களால் நாடத்தப்படுகின்றன.
விபரங்களுக்கு நேரில் வருக!
**திருவள்ளுவர் கல்விக்கழகம்**
Thiruvalluvar Academy
(லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக்கல்லூரி)
127, ஸ்டான்லி வீதி - யாழ்ப்பாணம்.

## நயினாதிவு கிராமசபை ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் கமநலச் சேவை உதவி ஆணையாளராகக் கடமையாற்றும் திரு. ப.க. பரமலிங்கம், கடந்த திங்கட் கிழமை தொடக்கம் நயினாதீவுக் கிராமசபையின் விசேட ஆணையாளராகப் பதவி ஏற்றார். இவர் வார இறுதித் தினங்களில் நயினாதீவுக் கிராமசபை அலுவலகத்தில் கடமையாற்றுவார். (நா)

......

## இன்று கல்விப் பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை பொருட்காட்சி இன்று காலை தொடக்கம் நண்பகல் வரை பாடசாலை அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறுகிறது. நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (கொ)

# "உள்ளதை உள்ளபடி சொல்வது இலக்கியம்அல்ல உந்துசக்தியாக அதுஇருக்கவேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"சிருஷ்டி இலக்கியம் ஒன்றினைப் படித்து முடிக்கும்போது இறுதியில் வெறும் பிரதேசம் மட்டுந்தான் மனதை நிறைத்துக்கொண்டு நிற்கு மெனில் அது ஒரு சிறந்த இலக்கியம் என்று சொல்லிவிடமுடியாது. நிறைந்த மனிதக்கூட்டம் மட்டும் கண்ணுக்குத் தெரியுமெனில் அது கூடச் சிறந்த இலக்கியம் அல்ல எந்த மனிதனின் அல்லது மனிதர்களின் பிரச்சனைகளுக்காக அந்த இலக்கியம் பிறப்பிக்கப்பட்டதோ அந்த மனிதனின் பிரச்சனைகளும் அதன் பின்னணியில் அந்தப்பிரச்சனைக் குட்பட்ட மாந்தரும் கண்ணுக்கு முன்னே மலைபோலே நிற்கவேண்டும். அப்போது தான் அந்த இலக்கியம் பிறந்ததற்கான பயன் சமூகத்தில் பிரதிபலிக்கும் இந்த இலக்கை 'நாமிருக்கும் நாடே' என்ற இந்தச் சிறுகதைத் தொகுப்பு அடையவில்லை.

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி கெயின்ஸ் கல்விநிலையத்தில்நடந்த தெளிவத்தை யோசப்பின் "நாமிருக்கும் நாடே" என்ற சிறுகதைத்தொகுதியின் விமர்சன அரங்கில் பேசும் போது எழுத்தாளர் கே. டானியல் குறிப்பிட்டார். திரு. நெல்லை நடேசு தலைமையில் நடந்த இவ்வரங்கில் அவர் மேலும் பேசும் போது கூறியதாவது:

இதுவரைவெளிவந்த மலைப் பிரதேசங்களைக் களமாகக் கொண்ட ஆக்க இலக்கியங்களில் காணமுடியாத மலைப் பிரதேசங்களை படம் பிடித்துக் காட்டுவதில் இதன் ஆசிரியர் வெற்றி பெற்றுள்ளார். அதற்காக அவர் பாராட்டப்படவேண்டியவர் ஆனால் அந்தப்பிரதேசத்தின் அவல நிலையில் வாழ்வற்றவாழ்வும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய வகையில் பாத்திரங்களை நடத்திச் செல்லவும் செயல் படவைக்கவும் வழிகாட்டவும் தவறியமையால் பொதுவான முற்போக்காளர்களினதும் சாதாரண மக்களினதும் எதிர்பார்ப்பை இந்நூலசிரியரால் அடைய முடியவில்லை. உள்ளதை உள்ளபடி சொல்வது அல்ல இலக்கியம் அதற்கும் அப்பால் மக்களை முன்செல்லஉந்துவதாகவும்தர வேண்டும் இதுவே கலைஇலக்கியங்களினதும் கடமையும் ஆகும் என்று அவர் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் கே. தங்க வடிவேல், டானியல் அன்ரனி ஆகியோரும் விமர்சன உரை நிகழ்த்தினர் நூலின் வெளியீட்டாளர் நித்தியானந்தன் பதிலுரை வழங்கினார்.

......

## மகாசிவராத்திரி....

(1-பக்கத் தொடர்ச்சி)

மதவாச்சி புகையிரநிலையத்தில் இருந்து புறப்படும் புகைவண்டி பி.ப. 4-12 க்குத் திருக்கேதீஸ்வரத்தை வந்தடையும்.

15-ந் திகதி காலை 7-15க்குத் திருக்கேதீஸ்வரத்தில் இருந்து புறப்படும் புகைவண்டி காலை 8-45க்கு மதவாச்சியை வந்தடையும். இது காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் உத்தரதேவியையும் கொழும்பில் இருந்து புறப்படும் யாழ்தேவியையும் இணைக்கும் திருக்கேதீஸ்வரத்தில் இருந்து பி.ப. 12-46 க்கு புறப்படும் புகைவண்டி மதவாச்சியை பி. ப. 3-03 க்கு வந்தடையும் இது காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் யாழ்தேவியையும் கொழும்பில் இருந்து புறப்படும் உத்தரதேவியையும் இணைக்கும் வழமைபோல் ஓடும் புகைவண்டி திருக்கேதீஸ்வரத்தில் இருந்து மு. ப. 7-35 க்குப் புறப்பட்டு மதவாச்சியை மு-ப 9-20க்கு வந்தடையும் பி. ப. 11 - 52 க்குத் திருக்கேதீஸ்வரத்தில் இருந்து புறப்படும் புகைவண்டி மதவாச்சிக்கு அதிகாலை 1-40 க்கு வந்தடையும்.

சிவராத்திரியை அனுஷ்டிக்கும் சிவனடியார்களுக்கு 14-ந் திகதி திருக்கேதீஸ்வர புகைவண்டி யாத்திரிகர்கள் தொண்டர் சபையினரால் மதவாச்சி புகையிரத நிலையத்தில் காலை அன்னதானமும் குளிர்பானமும் வழங்கப்படும். 15-ந் திகதி திருக்கேதீஸ்வர புகைவண்டி யாத்திரிகர்கள் தொண்டர்சபை மடத்தில் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் அமைந்துள்ளது. காலை அன்னதானமும் தேநீரும் வழங்கப்படும்.

......

## பாதியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விதித்து இனிமேல் இப்படிச் செய்வதில்லையென்ற உறுதிமொழியில் 50,000 ரூபா பிணையில் வீடியோ சாதனங்களை உரியவரிடம் ஒப்படைத்தார். (க)

பூநகரி சங்குப்பிட்டி வழியில்

## 'பாதை' ஒன்று வள்ளம் நான்கு

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வரம் செல்லும் வழியில் சங்குப்பிட்டி - கேரதீவுக்கடலில் இம்முறை ஒரேஒரு 'பாதை' மட்டுமே சேவையிலீடுபடுத்தப்படும்.

வாகனச் சொந்தக்காரரதும் திருக்கேதீஸ்வரத்துக்கு யாத்திரீகர்களை ஏற்றும் ஏனைய தனிப்பட்ட வாகனுதி உடைமையாளர்களதும் நன்மை கருதியே பூநகரி நிறைவேற்றுப்பொறியியலாளர் இச் செய்தியை அறிவிக்கின்றார்.

இ. போ. ச. பஸ்பிரயாணிகளுக்காக விசேடமாக நான்கு வள்ளங்கள் சேவையிலீடுபடுத்தப்படும். இவ்வள்ளச் சேவைகள் பூநகரி ப. நோ. கூ. சங்கத்தினால் மேற்கொள்ளப்படும். (நா)

## சுவரொட்டி ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. முத்துக்குமாரசாமி சாட்சியமளிக்கையில் 78 பெப்ரவரி மாதம் மட்டக்களப்புக்கு தாம் சென்றபோது மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் வைத்து தாம் கைது செய்யப்பட்டதாகவும் அங்கு பொலிஸ் நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்ட தமது புகைப்படமே சுவரொட்டியிலும் இடம்பெற்றிருந்ததாகவும் பொலிஸ் நிலையத்திலிருந்த போது தாம் அணிந்திருந்த 'பட்டிக்' ஷேர்ட் சுவரொட்டி புகைப்படத்திலும் தெரிவதாகவும் கூறினார்.

விசாரணைதொடர்ந்து நடைபெறுகிறது. (ம)

## வீடியோ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்த சமயம், பொலிசார் வருவதாகக் கேள்விப்பட்டதும், பெண்களும், குழந்தைகளும் சிதறி ஓடினார்கள் என்று கூறப்படுகிறது.

பொலிசார் யந்திரசாதனங்களைக் கைப்பற்றி பொலிஸ் நிலையம் கொண்டுசென்றனர். (க)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
**அமரர் ந. பாலசுப்பிரமணியம் நினைவு அஞ்சலிக் கூட்டம்**
காலம்; 1980-02-16 சனிக்கிழமை காலை 9-00 மணி.
**இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்**
தலைவர்: திரு. டி. எஸ். கே. வணசிங்க
மாண்புமிகு அ. அமிர்தலிங்கம், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், திரு. ஆர். பாஸ்கரலிங்கம், திரு. தி. மாணிக்கவாசகர், திரு. எல். ஆரியவன்ச, திரு. ஜீ. டி. தர்மசேன, திரு. எச். என். பெர்னண்டோ மற்றும் கல்வி அமைச்சு அதிகாரிகளும், ஆசிரிய தொழிற்சங்க பிரதிநிதிகளும் உரையாற்றுவர்.
அனைவரையும் பங்கு பற்றுமாறு வேண்டுகிறோம்.
த. மகாசிவம்,
பொதுச்செயலாளர்,
இ. த. ஆ. சங்கம்.
29, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். 4955

வெளிவந்து விற்பனையாகிறது!
கணித விஞ்ஞான தரவுகள் (வாய்பாடுகள்)
O/L A/L மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் தேவையான கணித விஞ்ஞான வாய்பாடுகளையும் தரவுகளையும் உள்ளடக்கியது.
தொகுப்பாசிரியர்: V. நடேசபிள்ளை B.sc, Dip in ED
வெளியீடு:
**மாக்மிலன் புத்தகசாலை** யாழ்ப்பாணம்.
விலை ரூபா: 7/90 V. P, P. உண்டு
கிடைக்குமிடங்கள்:
ஸ்ரீ லங்கா புத்தக சாலை
243· K. K. S. வீதி. யாழ்ப்பாணம்
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.
சாரதா, ஸ்ரோர்ஸ் & புத்தகசாலை
No. 2 A பஸ்நிலையம் யாழ்ப்பாணம்
கமலா அன்ட் பிறதர்ஸ்
நவீன சந்தை, பருத்தித்துறை.
யுனைட்டெட் ஸ்ரோர்ஸ் & புத்தகசாலை
பருத்தித்துறை.
கலைக் கோட்டம்
பெரியகடை, மன்னார்.
விஜயலெட்சுமி புத்தகசாலை
248, காலி வீதி, கொழும்பு-6

## இன்று வயாவிளான் உபதபால் நிலையம் தரமுயர்வு

வயாவிளான் உபதபால் கந்தோர் தபால் கந்தோராகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இத் தபால் கந்தோரை இன்று புதன்கிழமை மாலை யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் சம்பிரதாயபூர்வமாகத்திறந்து வைப்பார்.

யாழ். பிரதம தபால் அதிபர் திரு. தியாகராசா உட்பட மற்றும் பல தபால்கந்தோர் உயர் அதிகாரிகளும் இவ்வைபவத்தில் கலந்து கொள்வர். (கொ.அ)

**மரண அறிவித்தல்**
நாகேஸ்வரி தெட்சணாமூர்த்தி
நாகேஸ்வரி தெட்சணாமூர்த்தி காலமானார். இவர் ஓய்வுபெற்ற மாதர்சங்க தையல் நிலைய ஆசிரியையும், பளை P. W. D. ஓவசியர் தெட்சணாமூர்த்தியின்அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஐக்கிய வியாபாரச் சங்கக் கணக்காளர் சண்முகத்தினதும், முத்தம்மாஆகியோரது அன்பு மகளும், விஷ்ணுபாலாவின் அருமைத் தாயாரும், C. W. E. யைச் சேர்ந்த கனகலிங்கத்தின் சகோதரியும், செ. மார்க்கண்டு, திருமதி விஜயலட்சுமி வேலாயுதம்பிள்ளை, வன்னியசிங்கம் (ராமகிருஷ்ணாஸ்) சிறீஸ்காந்தன், திருமதி ஜெகதீஸ்வரி சிவானந்தம், திருமதி கமலாதேவி கனகலிங்கத்தின் மைத்துனியுமாவர். அன்னாரது ஈமச்சடங்குகள் திருநெல்வேலியில் உள்ள இல்லத்தில் இருந்து இன்று மாலை 4 மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 4956

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QD/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org